தொடர் - 7

# பழைய ஏற்பாட்டுப் பாத்திரங்கள் பத்து

ஆங்கிலம் - பிரான்ஸிஸ் டிக்சன்

தமிழில் - **P. A.** சுந்தர ராஜன்

தொடர் - 7

# பழைய ஏற்பாட்டுப் பாத்திரங்கள் பத்து

## ஆங்கிலம் - பிரான்ஸிஸ் டிக்சன்

### தமிழில் - P. A. சுந்தர ராஜன்


பாடம் 1 லோத்து - மீட்கப்பட்ட மனிதன் - இழந்த வாழ்வு

பாடம் 2 லோத்தின் மனைவி - நமக்கு ஒரு எச்சரிக்கை

பாடம் 3 ராகாப் - கடவுளின் அளவற்ற கிருபை

பாடம் 4 காலேப் - முழு இருதயத்தோடு பின் செல்லுதல்

பாடம் 5 சவுல் - ஆவியுலக வலை

பாடம் 6 சேபாவின் இராணி: இராஜ தரிசனம்

பாடம் 7 ஒபதியா - கர்த்தரின் ஊழியன்

பாடம் 8 மனாசே: பழைய ஏற்பாட்டின் கெட்டகுமாரன்

பாடம் 9 ஏசாயா - ஆசீர்வாதத்திற்கான படிகள்

பாடம் 10 எபெத்மெலேக் - மீட்புப் பணி

# பாடம் 1 லோத்து - மீட்கப்பட்ட மனிதன் - இழந்த வாழ்வு

இந்தத் தொடரில் நாம் பழைய ஏற்பாட்டுப் பாத்திரங்களான பத்துப்பேரைப் பற்றி படிக்கப் போகின்றோம். நம்மை ஊக்குவிக்க, மற்றவர்களை உற்சாகப்படுத்த, கடந்த காலங்களிலே கடவுளுக்கென ஊழியம் செய்த மக்களின் வரலாற்றைப் படிப்பதைவிட வேறு வழி ஏதும் இல்லை எனலாம். ரோமர் 15:4 பார்க்கவும். இப்படி நாம் படிக்கும்போது நமக்கு எச்சரிப்பும், ஆறுதலும் கிட்டுகிறது - 1கொரிந்தியர் 10:11,12. ஆகவே இந்தத் தொடரினை நாம் படிக்கும்போது உற்சாகமும் எச்சரிப்பும் கலந்து கிடைக்குமென்பது உறுதி.

லோத்தின் வரலாற்றை நாம் படிக்கும்போது, அது நமக்கு எச்சரிப்பைத் தருகிறது. மேலே குறிப்பிட்ட வேத பகுதிகளை நாம் படிக்கும்போது துக்கமடைகிறேம். இதிலே நாம் மீட்கப்பட்ட ஒரு மனிதனைப் பார்க்கிறோம். அவர் நீதிமான் என்று 2பேதுரு 2:6-9 கூறக் காணலாம். புதிய ஏற்பாட்டு மொழியில் சொல்வதானால், லோத்து ஒரு இரட்சிக்கப்பட்ட மனிதர். அவர் இரட்சிப்பை மட்டுமே பெற்றிருந்தார் ஆனால் உலக கிறிஸ்தவன். இரட்சிக்கப்பட்ட ஆத்துமா ஆனால் வல்லமையற்ற, இழந்து போன வாழ்வு கொண்டவர். ஏனெனில் அவர் சுயத்திற்கென வாழ்ந்தவர். அவர் காலத்திற்கும், உணர்ச்சிகட்கும் அடிமைப்பட்டு, அவர் வாழ்ந்த காலத்தே நிலவிய தீமைகட்கு இழுப்புண்டு அதற்கு இணங்கிப் போனார். லோத்தின் பரிதாப வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள் சிலவற்றை நாம் இந்தப் பாடத்தில் படிக்கலாம்.

1. லோத்து விசுவாசித்து நடவாமல் தரிசித்து நடந்தார். தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடப்பதே விசுவாசிகட்குரிய மெய்யான அடையாளமாகும். 2கொரிந்தியர் 5:7 படிக்கவும். ஆனால் உலக விசுவாசிகள் இதற்கு முரண் பாடானவர்கள். ஆபகூக் 2:4. ரோமர் 1:17, கலாத்தியர் 3:11, எபிரெயர் 10:38 பார்க்கவும். லோத்து தரிசித்து நடந்தாரென்பது அவரது மாம்சத்திற்குரிய சுயநலம் நிறைந்த தெரிவின் மூலம் அறியலாம். ஆதியாகமம் 13:1-11ஐப் படித்து 2கொரிந்தியர் 4:18 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

உலகப்பிரகாரமான கிறிஸ்தவர்கள் இந்த பூமியிலே ஆஸ்தியைக் குவித்து வைக்கின்றனர். ஆனால் பரலோக ஆஸ்தியை கொஞ்சம் மட்டுமே சேர்ப்பர் அல்லது சேர்ப்பதே இல்லை. மத்தேயு 6:19,20 படிக்கவும். உலகக் கிறிஸ்த வர்கள் தரிசித்து நடப்பர். உலக ஞானத்தாலும், உலக தரத்தாலும் ஆளுகை செய்யப்படுவர் - 1கொரிந்தியர் 2:2-7, 1யோவான் 2:15-17 வரைப் படிக்கவும்.

2. லோத்து துன்மார்க்கம் நிறைந்த சோதோமில் வீட்டைக் கட்டி பிள்ளைகளை வளர்த்தார். அவர் நன்றாய் ஆலோசனை செய்த பின்னரே இந்த முடிவுக்கு வந்தார் என்பதை ஆதியாகமம் 13:12,13 இல் படிக்கின்றோம். முதலாவது லோத்து சோதோமுக்கு நேராகத்தான் கூடாரம் போட்டார். பின்னர் அவர் சோதோமில் வாழ்ந்ததையும் (ஆதியாகமம் 14:12), சோதோமிலே செல்வந்தனாகவும், நிர்வாகக் குழுவின் உறுப்பினராகவும் அந்தப் பட்டணத்தின் அந்தஸ்தில் உயர்ந்தவனாகவும் இருக்கக் காண்கிறோம். லோத்து சோதோமின் முக்கியப் பிரமுகர்களில் ஒருவர். கடவுளின் பிள்ளைகட்கு இது எத்தனை கேவலமானது! அவர் சோதோமின் துன்மார்க்க மக்களை ‘சகோதரரே‘ என்று அழைக்கிறார் (ஆதியாகமம் 19:7) ஆகவே அவரும் அவர்களுக்குள் ஒருவராகிவிட்டார். அவர் உலகப் பிரகாரமாகச் சிற்றின்பப் பிரியனாக, சோதோமின் தெய்வ பயமற்ற வாழ்வை விரும்பாத மனிதனாக இருந்திருக்கலாம். ஆனால் கிறிஸ்தவர்கள் எவராகிலும் கடவுளை விட்டுத் தூரம் போக விரும்புவார்களா? ஆண்டவருக்கு இழுக்கு வர அனுமதிப்பார்களா? வெகு நாட்களுக்கு முன்பே அவரது மனைவியும், பிள்ளைகளும் சோதோமின் ஆட்டம், கொண்டாட்டம் கேளிக்கை, சிற்றின்பம், குடிவெறி, களியாட்டம் போன்ற உலக இச்சைகளில் ஊறிப்போய்விட்டனர். லோத்துக்கும், குடும்பத்தும் 4000 ஆண்டுகட்கு முன்பு நேரிட்ட இந்தக் காரியம் இக்காலத்திலும் நடந்து வருவதுதானே! ஆனால் கடவுள் நம்மை பிரித்தெடுக்கப் பட்ட வாழ்விற்கென அழைப்புக் கொடுக்கிறார் - 2கொரிந்தியர் 6:14-18, 2பேதுரு 2:20 படித்துப் பார்க்கவும்.

3. லோத்து கடவுளைவிட்டுத் தூரம் போய்விட்டார்
1. கடவுளின் பிரசன்னம் என்கிற உணர்வை இழந்தார். ஆதியாகமம் 13:14 படிக்கவும். ‘பின்பு‘ என்கிற வார்த்தையைக் கவனிக்கவும். எவ்வளவு பவித்தரமானது! யோபு 23:3 பார்க்க.

2. தேவ சமாதானம் என்கிற அனுபவத்தை இழந்தார் - 2பேதுரு 2:6-9 வரையில் படிக்கும்போது, சோதோமியரின் அக்கிரமங்க னால் லோத்து ‘இருதயத்தில் வாதிக்கப்பட்டார்‘ என வாசிக்கிறோம். அவரது மனசாட்சி வேதனைப்பட்டது. ஏசாயா 57:20,21 பார்க்க. உலகம், உலகமக்கள் என்கிற வலையில் மாட்டிக் கொண்ட அவரது இருதயத்தில் சமாதானத்தை எவ்வாறு அறிய இயலும்?

*3. தேவ வல்லமையை அவர் இழந்தார். கடவுளுக்கு வல்லமையாக இருக்க வேண்டிய மனிதன் பலவீனனாகி, உலகப் பிரகாரமானவனாகி, வீழ்ந்து போய், கீழ்ப்படியாதவனாகிவிட்டார். இவரது நிலையும், சிம்சோனின் நிலையைப் போலாகிவிட்டது - நியாயாதிபதிகள் 16:4-20 படிக்கவும்.*

*4. கடவுளின் தாக்கம் (செல்வாக்கு) லோத்துக்கு இல்லை. அவர் கடவுளின் மனிதனைப் போல காணப்படவில்லை. நடக்கவும் இல்லை. அவர் கடவுளுடைய பிள்ளை என்று எவராலும் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. ஆண்டவரின் வல்லமையான தாக்கம் (செல்வாக்கு) கிட்ட அவர் எவ்வித சிரத்தையும் எடுக்கவில்லை. அவர் பலவீனமுள்ளவராயும், உலகத்திற்குரியவராயும் இருந்த படியால், கடவுளைப் பற்றிய தாக்கம் ஏதும் அவரிடம் இல்லை.*

*1. சோதோமின் மனிதரிடமும் அவருக்கு எவ்வித செல்வாக்கும் இல்லை. இதை நாம் ஆதியாகமம் 19:1-11 வரை படித்தும்போது அறியலாம். குறிப்பாக வசனம் 7-9 வரை படிக்கும்போது, அவர்கள் அவரைப் பரிகாசம் செய்து நகைத்தனர். சோதோமின் மக்கள் லோத்தைப் புறக்கணித்தனர். உலகத்திற்கொத்த வேடம் தரித்த கிறிஸ்தவனை உலகம் புறக்கணிக்கும்.*

*2. சொந்த பிள்ளைகளிடமும் அவருக்குச் செல்வாக்கு இல்லை. இதை நாம் ஆதியாகமம் 19:8 இல் காண்கிறோம். இது நம்மை அதிர வைக்கும் வசனம் எனலாம். ஆதியாகமம் 19:14ஐக் காட்டிலும் துக்ககரமான வசனம் வேதாகமத்தில் ஏதாகிலும் உண்டா?*

*3. சொந்த மனைவியிடமும் செல்வாக்கு இல்லை. இதை நாம் ஆதியாகமம் 19:26 இல் பார்க்கலாம். இது அவளது கீழ்ப்படியாமையையும், பரிதாப முடிவையும் பற்றிக்கூறும் துக்ககரமான சம்பவம்.*

*5. பாவத்தின் வஞ்சகத்தினால் கடினப்பட்டு, லோத்து மேலும் மேலும் மோசமானார். ஆதியாகமம் 19:15,16 இல் அவர் தயங்கித் தாமதம் செய்ததைப் பார்க்கிறோம். அவரது மனசாட்டசி சூடுண்டிருந்தது (1தீமோத்தேயு 4:1) வரப்போகும் தண்டனையைப்பற்றிக் கடவுள் எச்சரித்திருந்தும், அவர் கடவுளுக்குக் கீழ்ப்படிய எவ்வளவாய் தாமதித்தார்! 2தெசலோனிக்கேயர் 1:7-9 படிக்கவும். இவைகள் வேதாகமத்திலுள்ள பயபக்தியுள்ள வார்த்தைகளில் சில எனலாம்.*

*6. லோத்து தன் மகள்களோடு இழிவாக நடந்து தன் மதிப்பை இழந்தார். ஆதியாகமம் 19:30-38 வரை விபச்சாரம், பலவீனம், வஞ்சகம், குடிபோதை, தகாத ஒழுக்கம் போன்ற பல்வேறு பயங்கரமான செயல்கள் கூறப்பட்டுள்ளன. இதன் விளைவாக மோவாப், அம்மோன் என்ற இரண்டு பிள்ளைகள் முறை தவறிப் பிறந்தனர். இவர்கள் சந்ததியே இஸ்ரவேலரின் கொடும் விரோதிகளாயினர். மோவாபியர் மற்றும் அம்மோனியரின் உள்ளத்திலேயும், வாழ்க்கையிலேயும் பாவம் குடிகொண்டிருந்ததால், அது செய ல் வெளிப்பட்டு இழிவிலும், பரிதாபத்திலும் கொண்டுபோய்விடும். ஒருவருடைய சொந்தக் குடும்பத்திலேயே இது நடக்கும்.*

*7. கடைசியாக லோத்து இரட்சிக்கப்பட்டாலும், நெருப்புக்கு இரையாகி தப்பினது போலாயிற்று. அவர் அக்கினியினின்று தப்புவிக்கப்பட்ட கொள்ளி - சகரியா 3:2ஐ 1கொரிந்தியர் 3:15, யூதா 23 உடன் ஒப்பிட்டுப் பார்க்க. ஒவ்வொரு விசுவாசியும், கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும். ரோமர் 14:10. அப்பொழுது நமது உண்மைக்குப் பரிசளிக்கப்படும் அல்லது லோத்தைப் போன்று, கவலையீனமாய், உலகப்பிரகாரமாக வாழ்ந்த மைக்குரிய இழப்பைக் காண்போம். விசுவாசிகள் யாவரும் இரட்சிக்கபடுவார் கள். ஆயினும் இது அக்கினியிலிருந்து தப்பினதுபோல இருக்கும். 1கொரிந்தியர் 3:11-15வரை படித்து ஆழ்ந்து சிந்திக்கவும்.*

### பாடம் 2 லோத்தின் மனைவி - நமக்கு ஒரு எச்சரிக்கை
வேதபகுதி: ஆதியாகமம் 19:1-29, லூக்கா 17: 22-37

லோத்து இரட்சிக்கப்பட்டார், அதுவும் தப்பி வந்தார். நாம் இப்பொழுது பார்க்கப் போகும் லோத்தின் மனைவியோ இரட்சிப்பின் விளிம்பிற்குப் போய், இழந்து போன நிலைக்குள்ளானாள். ஆதியாகமம் 19:17, 24-26 படிக்கவும். ஆண்டவர் இயேசு, வரப்போகும் நியாயத்தீர்ப்பைப் பற்றி கூறும்போது அது நோவாவின் நாட்களில் நடந்தது போலவும் (லூக்கா 17:26,27) லோத்தின் நாட்களில் நடந்தது போலவும் (வசனங்கள் 28,29) இருக்குமென்று கூறியவர், இந்தப் பெண்ணைப் பற்றியும் குறிப்பிடுகிறார். அவரே சத்தியமானவர் (யோவான் 14:6) அவர் எப்போதும் உண்மையானவற்றையே பேசுகிறவர். இடம் தவறி அவர் ஒரு வார்த்தையும் பேசமாட்டார். ஆதியாகமத்தில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் யாவும் உண்மையான வரலாறு. நாம் அதிலே படிக்கிற சம்பவங்கள் யாவும் நாடோடிக் கதைகளோ, கட்டுக்கதைகளோ அல்ல. அவைகள் யாவும் வரலாற்றுச் சம்பவங்கள். ஆண்டவர்தாமே அதை உறுதிப்படுத்தியுள்ளார். 'லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்' எனக்கூறிய அவர் தம்மைச் சுற்றியிருந்தவர்களுக்கு, அவளைச் சுட்டிக்காட்டி வரப்போகிற சடுதியான பயங்கரமான நியாயத்தீர்ப்பைப்பற்றி எச்சரித்தார். அவரது இரண்டாம் வருகை தொடர்பாக இதைக் கூறினார். இது வேதாகமத்திலுள்ள பயங்கரமான மற்ற வசனங்களைத் தொடர்புபடுத்திப் பார்க்க நம்மைத் தூண்டுகிறது - 2தெசலோனிக்கேயர் 1:7-9 பார்க்கவும். இந்த எச்சரிக்கை தரும் வார்த்தைகளின் கருத்தை மிதமாகவே, நீர்த்துப் போனதாகவோ எண்ணவேண்டாம். 'லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்' (லூக்கா 17:32). நாம் நினைவுகூரும் அளவுக்கு அவள் யார்? எதற்காக நினைக்க வேண்டும்? அவளைப் பற்றி நினைவுகூர குறிப்பாக ஐந்து காரியங்களைக் கூறலாம்.

1. நினைவிற் கொள்க. லோத்தின் மனைவி, பெரிய சிலாக்கியங்களைப் பெற்ற பெண்ணாக இருந்தும் அழிந்து போனாள். அவள் நீதிமானாகிய, விசுவாசியான லோத்தின் மனைவியாக இருந்தாள். இருப்பினும் அழிந்து போனாள். கடந்த பல வருடங்களாக, லோத்து கடவுளை நம்பி வாழ்ந்தார். அவரை நோக்கி ஜெபித்து வந்தார். ஆராதித்தார், ஆயினும் திருமதி லோத்து அவரைப் போன்ற விசுவாசம் இல்லாமல் கடவுளைவிட்டுத் தூரமாகவே இருந்தார். ஒரு வேளை கணவன் மனைவியாகிய இவ்விருவரும் சேர்ந்து வாழவில்லை, ஆனால் சேர்ந்து தூங்கினர். மற்ற யாவற்றையும் சேர்ந்து செய்தனர். இருப்பினும் இக்கட்டான காலத்தே, லோத்து காக்கப்பட்டார், அவரது மனைவியோ அழிந்து போனாள். மனந்திரும்பாத மக்களுக்கென ஒரேயொரு நியாயத்தீர்ப்பு உண்டு. லூக்கா 13:3 படிக்கவும். யோவான் 3:16, 1கொரிந்தியர் 1:18 படித்து அதிலே வரும் 'கெட்டுப் போவீர்கள்' என்கிற வார்த்தைகளைக் கவனிக்கவும். எபிரெயர் 2:4. இதைத் தொடர்புபடுத்தி மத்தேயு 24:40-42 வரைப் படித்துப் பார்க்கவும்.

2. நினைவிற் கொள்க: வரப்போகின்ற அபாயத்தைக் குறித்தத் தெளிவான எச்சரிப்பு கிட்டியும் லோத்தின் மனைவி அழிந்து போனாள். கடவுளைப் பற்றியும், சோதோமின் மேல் வரப்போகின்ற தண்டனையைக் குறித்தும் கேள்விப்படவே இல்லையென்று லோத்தின் மனைவி சாக்குப் போக்குக் கூறமுடியாது. ஆதியாகமம் 19:14-17 படிக்கவும். ஒருவரும் கூறாததினால் எச்சரிப்பு கொடுக்காத தினால் இக்காலத்திலேயும் மக்கள் பலர் வரப்போகின்ற தண்டனை பற்றிக் கேள்விப்படாதிருக்கலாம். ஆனால் லோத்தின் மனைவியின் நிலை வேறு. இந்தப் பாடத்தைப் படிக்கிற நம் நிலையும் அதுவே. இரட்சிக்கப்படாத ஒவ்வொரு ஆத்துமாவும் பயங்கர ஆபத்திலுள்ளது. கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளாமல், அவரிடம் வராமல், விசுவாசம் வைக்காத யாவரும் தண்டனைக்குரியோர் (யோவான் 3:18). கடவுளின் கோபம் அவர்கள் மே ருக்கும் (யோவான் 3:36) அவர்கள் ஆண்டவர் இருக்கும் இடத்திற்குப் போக முடியாது. இதே நிலையில் அவர்கள் மரித்தால், அவர்கள் பாவத்திலே மரிப்பார்கள் (யோவான் 8:21) ஆம் அவர்கள் நித்தியமாக கடவுளின் பிரசன்னத்தை விட்டு தள்ளப்பட்டிருப்பார்கள் (வெளிப்படுத்தல் 20:15)

3. நினைவிற கொள்க: தண்டனையினின்று தப்புவதற்கெனச் சிறிது முயன்றும், லோத்தின் மனைவி அழிந்து போனாள். சோதோமைவிட்டு வெளியே செல்ல அவர் அதிகாலையில் எழுந்து, ஆயத்தமாகி லோத்துடன் புறப்பட்டாள் என்று நாம் படிக்கின்றோம். ஆனால் அவள் தொடர்ந்த பிரயாணத்தை முடிக்கவில்லை. சோவார் என்ற அடைக்கலப் பட்டணத்து பாதுகாப்பைத் தேடினாள். அவள் சோவாருக்கும் போகவில்லை. வழியிலேயே அவள் அழிந்து போனாள். இக்கால மக்கள் பலர், தங்கள்

*கெட்ட செயல்களை விட்டுவிட்டு நல்லவற்றைப் பற்றிக் கொள்ள அதிகமாக முயற்சி செய்கின்றனர். அதாவது சபைக்குச் செல்வது, வேதம் வாசிப்பது, கெட்டபழக்கங்களை விட்டுவிடுவது போன்ற முயற்சிகள் போதாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துதான் பாதுகாப்பான, நிச்சயமான அடைக்கலமாகும். - எபிரெயர் 6:18 படிக்கவும். நாம் கிரியையினால் இரட்சிக்கப் படாமல், ஆண்டவர் இயேசுவின் மேல் வைக்கும் விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்படைகிறோம். ரோமர் 4:5, எபேசியர் 2:810, தீத்து 3:5-7 பார்க்கவும்.*

*எத்தனை தான் தர்மம் நித்தம் பூசை பலிகள்*
*அத்தனையாலும் பாவம் தீராதே -*
*பரிசுத்தன் இயேசுவின் திரு இரத்தத்தினாலே*
*எமைச் சுத்திகரிக்கும் . நீ சோராதே*

*4. நினைவிற் கொள்க: ஒரேயொரு பாவத்தை மட்டுமே செய்து லோத்தின் மனைவி அழிந்து போனாள். 'உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே...' (ஆதியாகமம் 19:17) என்பதே கட்டளை. ஆனால் அவளோ, 'பின்னிட்டுப் பார்த்து' அழிந்து போனாள் (வசனம் 26) அவிசுவாசம் என்கிற ஒரேயொரு பாவம் மட்டுமே - அது முழுமையான, முடிவான ஆவிக்குரிய அழிவைக் கொண்டு வந்தது. யோவான் 16:7-11 வரை படிக்கவும்.*

*5. நினைவிற் கொள்க. இரட்சிப்பின் விளிம்பில் இருந்தும்கூட லோத்தின் மனைவி அழிந்து போனாள். அவர் சோவாருக்கு அருகே பட்டண வாசலை நெருங்கும்போது, அவள் பாதுகாப்பான இடத்திற்குப் பல மைல் தொலைவிலே இருக்கும்போதல்ல, பல காதங்கள் தள்ளியிருக்கும் போதல்ல, மிக அருகில் நெருங்கும்போது கடவுளின் தண்டனை அவளுக்குக் கிடைத்தது. கிட்டத்தட்ட இரட்சிப்படையும் நிலைக்கு நெருங்கினபோது இந்தப் பெண் அழிந்து போனாள். அவள் இரக்கத்திற் வாசலருகே வந்துவிட்டாள். ஆயினும் உள்ளே நுழையவில்லை. வெளியிலேயே இருந்தாள். எவ்வளவு பரிதாபம்! 'லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்' என்கிற் இந்த எச்சரிப்பின் வார்த்தைகளைக் கொண்ட இந்தப்பாடம் அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களை ஆண்டவர் இயேசுவிடம் கொண்டுவர நம்மைத் தட்டியெழுப்பி ஆழ்ந்த கரிசனையைத் தரவேண்டும். லோத்தின் மனைவிக்கு நேரிட்ட அழிவு மிகவும் பயங்கரமானது. இழந்துபோன பாவிகட்கு நேரிடும் முடிவு இதைக் காட்டிலும் கொடியதாக இராது. நாம் இதை விசுவாசித்தால் நமது இரட்சிப்பைக் குறித்து நிச்சயமுள்ளோராய் இருப்போம். பின்னர் ஆண்டவராகிய இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக கொள்ளாத மக்கள், வரப்போகிற அபாயத்தை உணர பரிசுத்த ஆவியானவர் எச்சரிப்புக் கொடுக்க, நாம் அதற்கான வழி தேடுவோம். சங்கீதம் 51:14, எசேக்கியேல் 3:18, மத்தேயு 3:7, அப்போஸ்தலர் 20:31, 2கொரிந்தியர் 5:11, கொலோசெயர் 1:28*

*பிரசங்கிமாரே! நம்முடைய பிரசங்கங்கள் நாம் இந்த எச்சரிப்பைக் கொண்டுவர வேண்டியது மிக முக்கியம்! நாம் மக்களை விசுவாசிப்பதற்கென அழைப்பது மட்டும் போதாது (அப்போஸ்தலர் 16:31). அவர்கள் மனந்திரும்பி விசுவாசிக்க வேண்டும் - மாற்கு 1:15. இதைச் செய்யத் தவறினால் நேரிடும் அபாயங்களைக் குறித்தும் எச்சரிக்க வேண்டும். வரப்போகும் ஆபத்து எப்படிப்பபட்டதென நாம் தெரிந்திருந்தால்தானே, நாம் அவர்களது விடுதலையைத் தேடுவோம்!*

பாடம் 3 ராகாப் - கடவுளின் அளவற்ற கிருபை (வேதபாடம்: எபிரெயர் 11:31, யோசுவா 2:1-24, 6:17,20-25)

கடவுள் பாவத்தைக் கவனியாமல் விட்டுவிடுகிறவரல்ல. பொறுத்துக் கொள்ளுகிற வருமல்ல. ஆயினும் வீழ்ந்தபோன, பாவம் செய்த மக்கள் பாவத்தின் தண்டனையினின்றும், பாவத்தின் வல்லமையினின்றும் விடுதலையடைய ஒரு வழியை உண்டாக்கியுள்ளார். அதுதான் விசுவாச வழியாகும். விசுவாசம், (இதைப்பற்றி நாம் இந்தப்பாடத்தில் பார்க்கலாம்) அதாவது நமக்கென தமது இரத்தத்தைச் சிந்தின ஒருவர் மீது வைக்கும் விசுவாசம்! ராகாபின் வரலாற்றில், அவரது விலையேறப் பெற்ற இரத்தம் ஒரு 'நிச்சயமான அடையாளமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'சிவப்புக் கயிறு' என்பது அவளது பாதுகாப்பிற்கும், அவளது குடும்பத்தார் மற்றும் அவளைச் சேர்ந்த யாவருக்கும் பாதுகாப்பை உறுதியளிப்பதாக இருந்தது - யோசுவா 2:12,18, 6:25ஐப் படித்து, எபிரெயர் 11:13 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். 'விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி கீழ்ப்படியாத வர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள்' என்பதைக் காணும்போது, நமக்கு ஆச்சரியமாகவுள்ளது அல்லவா! (எபிரெயர் 11:31) அவமானத்தின் ஆழத்தி ருக்கும் ஒரு பாவி, அழியாப் புகழின் உச்சிக்குப் போகமுடியுமா? முடியும்! கொலோசெயர் 1:13 பார்க்கவும். கடவுளின் கிருபை கானான் நாட்டிலுள்ள ஒரு வேசியைத் தெரிந்து கொண்டு, கிறிஸ்துவின் வம்சாவழிப் பட்டிய ல் கொண்டுவர இயலுமா? ஆம்! நீதிமொழிகள் 28:13 பார்க்கவும். கடவுளின அற்புதமான இரட்சிப்பின் வழியைப் படம் பிடித்துக் காட்டுவதை இந்த எடுத்துக்காட்டின் மூலம் காணலாம். ராகாபின் விசுவாசத்தைப் பாருங்கள். இது எவ்வாறு ஆரம்பமானது? எவ்வாறு செயல் பட்டது? எவ்வாறு வெளிப்பட்டது? இதன் விளைவு என்னவென நாம் பார்க்கலாம்.

1. ராகாப் ஒரு இழிவான பாவியாக இருந்தபோதிலும் விசுவாசத்தின்மூலம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டாள். ஆம்! இது ஒன்றே பாவியான மனிதன் இரட்சிக்கப்படும் வழியாகும்ய எபேசியர் 2:8-10 ஐ தீத்து 3:5 உடன் ஒப்பிட்டுப் பார்க்க. ராகாப் ஒரு புறஜாதிப் பெண். அவள் ஆவிக்குரிய இருட்டில் வாழ்ந்து வந்தாள். விக்கிரக வழிபாட்டு மக்கள் நடுவில் வாழ்ந்தாள் - யோவான் 3:19-21 பார்க்க. அவள் ஒரு வேசி (சத்திரக்காரியாகவும் இருக்கலாம், அப்படியும் ஒரு பொருள் உண்டு) ஆனால் கடவுள அவளையும் நேசித்தார் - யோவான் 3:16 ஐ லூக்கா 7:36-50, யோவான் 8:3-11, ரோமர் 3:22,22, யாக்கோபு 2:10 உடன் ஒப்பிட்டுப் பார்க்க. அக்காலத்தே அவளுக்கு இருந்ததைப் போன்றே நம்முடைய தேவையும் முக்கியமானது! கோட்டை மதில் மீதிருந்த தன் வீட்டில் தேடிவந்த உள்ளூர் வாசிகளையும், வெளியூர்காரரையும் உபசரித்தாள்- யோசுவா 2:16 பார்க்க

2. ராகாபின் விசுவாசம், மெய்யான விசுவாசத்தின் ஆரம்ப இடமாகிய கடவுளின் வார்த்தையைக் கேட்பதின் மூலமா ஆரம்பமாயிற்று. கேள்விப்பட்டதாக அவள் இருமுறை கூறியிருப்பதை யோசுவா 2:10,11 இல் பார்க்கிறோம். கேள்விப்பட்டதினால் விசுவாசித்தாள். தான் கேட்டதை விசுவாசித்தபடியினாலே, 'அறிவேன்' (யோசுவா 2:9) என்று அவளால் கூறவும் முடிந்தது. கடவுளை அவரது வார்த்தையின்படியே ஏற்று நம்புவதற்கு விசுவாசம் உதவி செய்கிறது ரோமர் 4:20-21 பார்க்கவும்! ராகாப் இரட்சிக்கப்பட்டபடியே நாமும் இரட்சிக்கப் படுகிறோம். நாம் சுவிசேஷத்தைக் கேட்கிறோம். யோவான் 5:24 பார்க்கவும். நாம் தண்ட னைக்குட்பட்டவர்கள் என்று கேட்கிறோம். அதற்காக பயந்து நடுங்கு கிறோம் - யோசுவா 211, யோவான் 3:18, 36 பார்க்க. விசுவாசத்தினாலே, கடவுளை அவரது வார்த்தையின்படியே நம்பி, ஏற்றுக்கொண்டு நாம் இரட்சிக்கப் படுகிறோம். அப்போஸ்தலர் 16:30,31 ஐப் பார்க்கவும்.

3. ராகாப் தனது விசுவாசத்தை வேவுகாரரிடம் அறிக்கையிட்டாள். அவள் ஒரு இரகசிய விசுவாசி அல்ல. அறிவுப்பூர்வமான் விசுவாசத்திற்கும், இருதயப் பூர்வமான விசுவாசத்திற்குமுள்ள வேறுபாட்டைக் கவனிக்கவும். யோசுவா 2:10 இல் 'கேள்விப்பட்டோம்' என்று கூறுவதி ருந்து எரிகோ மக்கள் பலர் இதைக் கேட்டிருந்தார்களென அறியலாம். ஆனால் வசனம் 9 இல் அறிவேன் என்பதைக் கவனிக்கவும். எரிகோ மக்கள் பலர் ஆண்டவரைக் குறித்தும், அவரது வல்லமையையக் குறித்தும், கேள்விப்பட்டு நம்பினர். ஆனால் ராகாபோ, நம்பினதோடு நில்லாமல், ஆண்டவரில் உறுதியாக நின்றாள். இப்பொழுது ரோமர் 10:9,16 படிக்கவும். குறிப்பாக 'இருதயத்திலே' என்கிற வார்த்தையைப பார்க்கவும். நாம் தலையிலே (அறிவாலே விசுவாசிப்பது மட்டும் போதாது. நாம் அவரை நம் இருதயத்திலே நம்ப வேண்டும். அவரை விசுவாசித்து, இருதயத்திலே நம்பி ஏற்றுக்கொண்ட பின்னர் நாம் அவரை

*நம்து வாயின் மூலமாகவும். வார்த்தையின் மூலமாகவும் அறிக்கைச் செய்ய வேண்டும். மத்தேயு 10:32,33 பார்க்கவும்.*

*4. ராகாபின் விசுவாசம் அவளது கிரியையினாலே வெளிப்பட்டது. விசுவாசத்தை வெளிப்படுத்துவது கிரியையாகும் - யாக்கோபு 2:25 உடன் எபேசியர் 2:10. பி ப்பியர் 2:12-13 ஒப்பிட்டு நோக்குக. உண்மையான விசுவாசம் வெளிப்படையாகத் தெரியும். வேவுகாரரை ஒளித்து வைத்தும் (யோசுவா 2:1,4,6) வேவுகாரரிடம் கூறிய அறிக்கையும் (வசனங்கள் 9-12) வேவுகாரரை தப்புவித்து அனுப்பியதும் (வசனம் 16) ராகாபின் விசுவாசத்தின் சாட்சியாகும். ராகாபின் விசுவாசத்தின் உச்சகட்ட சாட்சியாக யோசுவா 2:18 இல் அவள் கட்டி வைத்திருந்த சிவப்பு நூல் கயிற்றைக் கூறலாம். அவள் வேவுகாரரின் வார்த்தையை நம்பினாள் என்பதற்கான நிச்சயமான அடையாளம் (வசனம் 12) அந்தக் கயிறு எனலாம். அந்தக் கயிறு தனது ஜன்ன லே கட்டப்பட்டு இருக்கும் வரை, தனக்குப் பாதுகாப்பு உண்டென்று நம்பினாள். யோசுவா 2:21ஐ யாத்திராகமம் 12:12,13 உடன் ஒப்பிட்டுப் பார்க்க. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே குற்ற உணர்வுள்ள பாவிக்குரிய பாதுகாப்பான அடைக்கலம் - 1யோவான் 1:7 படிக்கவும்.*

*5. ராகாபின் விசுவாசம் ஒரு பெரிய மாறுதலைக் கொடுத்தது. அவள் ஆண்டவரை வசிவாசித்தபடியினாலே அவளது வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது. விசுவாசியான அவள் அந்தச் சபிக்கப்பட்ட பட்டணத்தி ருந்து வெளியேற வேண்டியிருந்தது. கானானியரான தனது மக்களைவிட்டு அவள் பிரிய வேண்டியிருந்தது. ஆண்டவரின் பிள்ளைகளோடு இணைந்து செல்ல வேண்டி யிருந்தது. அவள் நிச்சயமாக விக்கிரகங்களைவிட்டு விலகி மெய் கடவுளிடம் வந்தாள். எல்லாம் புதிதாயின. 2கொரிந்தியர் 5:17 ஐப் படித்து, 1தெசலோனிக்கேயர் 1:9 உடன் ஒப்பிடுக. இருதயத்தில் கிருபையின் வேலை தொடங்கும்போது அது எப்பொழுதும் வாழ்வில் ஒரு பெரிய மாறுதலைக் கொண்டுவரும் என்பது உறுதி!*

*6. ராகாபின் விசுவாசம் அவளது நண்பர்களையும் அன்புக்குரிய யாவரையும் சுற்றிப் பிடித்தது. யோசுவா 2:12,13 இல் இதைக் காணலாம். தனது குடும்பத்தாரும், நண்பர்களும் இரட்சிக்கப்படவேண்டும் என்ற பாரங்கொண்டு செயல்படும் இப்பெண்மணியைப் பார்க்கும்போது, அது எவ்வளவு அருமையாகவுள்ளது! அவள் ஒரு எஸ்தருக்கு ஒப்பானவள் - எஸ்தர் 8:6 பார்க்க. அந்திரேயா போன்றவர் - யோவான் 1:40-42 படிக்கவும். அவள் பி ப்பு போன்றவள் - யோவான் 1:43-49 பார்க்க. அவள் சமாரிய கிணற்றடி பெண்ணுக்கொப்பானவள் - யோவான் 4:28-30, இரட்சகரை அறியாத நமது குடும்பத்தார், நண்பர்கள் குறித்து மெய்யான கரிசனை உண்டா? நாம் அவர்களது இரட்சிப்பிற்கென என்ன செய்கிறோம்?*

*7. ராகாபின் விசுவாசம் அவளை ஒரு மேலான கௌரவத்திற்குக் கொண்டு வந்தது. அவளை ஆண்டவரின் ஆசீர்வாதம் கொணரும் சிறப்பான வாய்க்காலாக மாற்றினது. கடவுளின் கிருபை மிகவும் அருமையானது! ஆண்டவரோடு உயிருள்ள உறவு கொண்டு இந்தப் பெண்ணாகிய ராகாப், ஒரு அருமையான பக்தியுள்ள கணவனைப் பெற்றாள். இவர்கள் மணவாழ்வின் பயனாக அவள் தாவீதின் தாத்தா போவாசின் தாயானாள் - ரூத் 4:21,22 பார்க்க. மத்தேயு 1:5,6,16 உடன் இதை ஒப்பிட்டுப் பார்க்கவும். இந்தப் பாடத்தைப் படித்து முடிக்கும் முன்பு, யோசுவா 6:21,22,23,25 படிக்கவும்.*

*'வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும், உறைந்த மழையைப் போல் வெண்மை யாகும், அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்' - ஏசாயா 1:18*

## பாடம் 4 காலேப் - முழு இருதயத்தோடு பின் செல்லுதல்

### வேதபாடம் - யோசுவா 14:1- 15

*காலேப் தன் முழு இருதயத்தோடும் ஆண்டவரைப் பின்பற்றினார் என்று பரிசுத்த ஆவியானவர் ஆறு இடங்களில் கூறியுள்ளார். கடவுளை விசுவாசிக்கும் மக்கள் சிலர் அவரைப் பின்பற்றுவதோடு நிறைவு பெற்றுவிடுவர். ஆனால் காலேபோ அவரை முழுமையாகப் பின்பற்றினார். முழு இருதயத்தோடும் பின்பற்றினார். எண்ணாகமம் 14:24, 32:11,13, உபாகமம் 1:36, யோசுவா 14:8,9,14 பார்க்கவும். நீங்கள் முழு மனதுடன் அவரைப் பின்பற்றும் கிறிஸ்தவரா அல்லது அரைகுறை மனதுள்ள கிறிஸ்தவரா?*

*1. காலேப், முழு இருதயத்தோடும் ஆண்டவரைப் பின்பற்றினார் என்பதற்கு மூன்று சாட்சிகள் உண்டு. நாமுங்கூட அவரை முழுமனதோடு பின்பற்றுகிறோமா என்றறிய இவை உதவும்.*

*1. காலேப் இதற்கு முதற்சாட்சி. தன்னைக் குறித்து, அவர் என்ன கூறியுள்ளார் என்பதை யோசுவா 14:8 இல் காண்க. இவ்வாறு பெருமைபாராட்டுவது பாவமல்ல. இது உண்மையான சாட்சியாகும். கடந்த ஆண்டு, கடந்த மாதம், நாட்கள், நாள், மணி குறித்து நம்மால் இவ்வாறு கூற முடியுமா?*

*2. மோசே இதற்கு இரண்டாம் சாட்சி. யோசுவா 14:9 இல் அவர் காலேபைக் குறித்துக் கூறியுள்ளதைக் காண்க. நாம் முழுமையாக ஆண்டவரைப் பின்பற்றும் போது, அதை நாம் நமக்குள் அறிவதோடு மட்டுமன்றி, நம்மைச் சுற்றியிருப்போரும் அறிவர். நம்முடைய பின்பற்றுதலைக் குறித்து, நமது இரட்சிக்கபடாத நண்பர்கள் என்ன கூறுகிறார்கள்?*

*3. ஆண்டவர் இதற்கு மூன்றாம் சாட்சி. அவர் தமது ஊழியனைக் குறித்துக் கூறியுள்ளதை எண்ணாகமம் 14:24 இல் காண்க. மக்கள் யாவருடைய உள்ளங்களையும் அறிந்த ஆண்டவர் நம்மைக் குறித்தும் இவ்வாறு கூறுவாரா? இதுவே மேலான சோதனையாகும். இதற்கு மதிப்பு அதிகம் உண்டு. என்னுடைய பின்பற்றுதலைக் குறித்து ஆண்டவர் என்ன கூறுகிறார்?*

*2. இந்த மூன்று சாட்சிகளும் நாம் ஏன் ஆண்டவரை முழு இருதயத்தோடும் பின்பற்ற வேண்டும் என்பதற்குரிய காரணங்களையும், நோக்கங்களையும் கூறுகிறது.*

*1. இதனால் கடவுள் மகிமையடைய வேண்டும். அவரை மகிமைப்படுத்து வதற்கென்று ஒரேயொரு வாழ்க்கைதான் உண்டு. அது அவருக்கென முழு இருதயத்தோடும் ஒப்புக்கொடுத்த வாழ்க்கையாகும். நாம் பரிசுத்தமுள்ள வர்களாக இருக்கவேண்டும் என்பதே அவர் நம் ஒவ்வொருவருக்கும் கூறும் கட்டளையாகும். (லேவியராகமம் 20:7, எபிரெயர் 12:14) முழுமையாக! யோவான் 5:6, 1பேதுரு 1:15,16 படிக்கவும்.*

*2. இதனால் மற்றவர்கள் போதிக்கப்படுவர். எந்த வாழ்வு வல்லமை யுள்ளது? மற்றவர்களை ஆண்டவரிடம் ஈர்ப்பது? அவரை முழு இருதயத்தோடும் பின்பற்றும் வாழ்வா அல்லது அரைகுறை மனதோடு அவருக்கென வாழ்வதா? கிறிஸ்தவர்கள் பலர் எல்லாவற்றிலும் முழு இருதயத்தைச் செலுத்தி, கிறிஸ்தவ வாழ்வில் மட்டும் அரைகுறை மனதோடு இருப்பதினால்தான் அது சுவிசேஷம் பரம்புவதற்குத் தடையாகவுள்ளது எனக்கூறலாம்.*

*3. இதனால் நான் மன நிறைவடைய முடியும். இது சுயநலம் போன்று தோன்றலாம். ஆனால் சுயநலமல்ல. நாம் யாவரும் மன நிறைவைத் தேடுகிறோம். ஆண்டவராகிய இயேசுவை முழு இருதயத்தோடும் பின்பற்றுவதிலேதான் மெய்யான நிறைவைக் காணமுடியும். இதையே காலேப் தனது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் யோசுவா 14:8 இல் கூறியுள்ளார்.*

*3. முழு இருதயத்தோடும் ஆண்டவரைப் பின்பற்றுதல் என்பதற்கு என்ன பொருள்? இது எதை வலியுறுத்துகிறது?*

*1. <u>முழு இருதயத்தோடும் ஆண்டவரைப் பின்பற்றுதல் என்பது மனதின் உறுதியை வலியுறுத்துகிறது.</u> ஆண்டவரை முழுமையாகப் பின்பற்றுதல் என்பது எல்லா வற்றிலும் முழு கவனம் செலுத்துவது எனலாம். இந்த ஒரு காரியம் செய்ய நாம் எல்லாவற்றிலும் கவனமாயிருக்க வேண்டும். இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக பவுலைக் கூறலாம். அவர் கூறியுள்ளதைப் பிலிப்பியர் 3:13 இல் காண்க. பவுல் ஒன்றைச் செய்யத் தீர்மானித்தார். ஒரேயொரு செயலை, அதாவது அது ஆண்டவரை முழு இருதயத்தோடும் பின்பற்றும்*

செயல் மட்டுமே. ஆண்டவரை முழு இருதயத்தோடும் பின்பற்றச் சிதறாத விசுவாசம் தேவை. இதற்கென ஆண்டவர் மத்தேயு 6:24 இல் கூறியுள்ள சிந்திக்க வைக்கும் வார்த்தைகளைப் பாருங்கள். இங்கு நாம் மன ஒருமையைக் குறித்துக் காண்கிறோம். ஒரே ஆண்டவரும் எஜமானுமாகிய அவருக்கே முழு விசுவாசமுடையோராய் இருக்க வேண்டும் - மத்தேயு 23:10, யோவான் 13:13ஐ சங்கீதம் 16:8 இன் வார்த்தைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

2. முழு இருதயத்தோடும் ஆண்டவரைப் பின்பற்றுதல் என்பது முழுமை யடைதலை வலியுறுத்துகிறது. அதாவது ஆண்டவரை முழுமையாகப் பின்பற்றுவது எனலாம். அவரை முழுமையாகப் பின்பற்றுதல் என்பதற்கு, அவரைப் பூரணமாக, முழுமையாக, முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், எவ்வித ஒதுக்குதலும் இன்றி, பின்பற்றுதல் எனலாம், லூக்கா 9:61 படிக்கவும். இதன் பொருள் என்னவெனில், நாம் எல்லாவற்றிலும் அவரைப் பின்பற்ற வேண்டும். நாம் செய்யும் எல்லாவற்றிலும், நாம் சொல்லும் எல்லா வற்றிலும், எந்தச் சூழலிலும், எதைச் செய்தாலும் யாவற்றிலும் முழுமையாகப் பின்பற்றுதல் என்பது. என் உள்ளம் அவரில் அன்புகூரவேண்டும். என் சித்தம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். என் சிந்தை அவருக்கெனச் சிந்திக்க வேண்டும். என் கால்கள் அவருக்கென ஓட வேண்டும். என் குரல் அவரைப் பாடவேண்டும். என் கைகள் அவருக்கென உழைக்க வேண்டும். என் கண்கள் அவருக்கெனக் காணவேண்டும். என் உதடுகள் அவருக்கெனப் பேச வேண்டும். நம்மிடமுள்ள எல்லாவற்றையும்விட அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்பதே இதன் பொருள். நம்மிடமுள்ள யாவற்றையும் அவருக்கென ஒப்புக் கொடுத்தல் என்பதே இதற்கு அர்த்தம். ரோமர் 6:13 பார்க்க. ஆண்டவருக்கு நமது வரங்களும், தாலந்துகளும் தேவை. எல்லாவற்றிற்கும் மேலாக அவருக்கு நாம் தேவை!

3. முழு இருதயத்தோடும் ஆண்டவரைப் பின்பற்றுதல் என்பது தொடர்ந்து செல்வதைக் குறிக்கும். நம்மில் பெரும்பாலானோர் தயங்கித் தயங்கி அவரைப் பின்பற்றுகிறோம். ஒரு நாளிலே முழு இருதயத்தோடும் பின்பற்றுகிறோம். அடுத்த நாளிலே அரைகுறை மனதோடு பின்பற்றுகிறோம். லூக்கா 22:23 பார்க்கவும். இங்கு பேதுருவின் நோக்கம் ஆண்டவரை முழுமையாகப் பின்பற்றுவதாகும். ஆனால் லூக்கா 22:54இல் அவர் தான் கூறியதை செய்யத் தவறிவிட்டதைக் காண்கிறோம். பேதுரு நிலையாக இருக்கவில்லை. ஆண்டவரை முழுமையாகப் பின்பற்றுதல் என்பது, எல்லா வேளையிலும் அவரைப் பின்பற்ற வேண்டும். எந்த நேரத்திலும் அவரைப் பின்பற்றி நடக்கவேண்டும். கிறிஸ்தவன் என்பவன் ஒரே நோக்கமுடையவன் - லூக்கா 9:51 ஐ சங்கீதம் 16:8 உடன் ஒப்பிட்டுப் படிக்க.

4. முழு இருதயத்தோடும் ஆண்டவரைப் பின்பற்றுத ன் இரகசியம் என்ன?

இந்தக் காரியங்கள் யாவற்றிற்கும் போதுமானவர் யார்? நம்முடைய சுய பெலத்தினால் நாம் முழுமையாக ஆண்டவரைப் பின்பற்ற இயலாது! இருப்பினும் காலேப் முழுமையாகப் பின்பற்றினார். இதனால் அவர் கற்றுக்கொண்ட இரகசியம் என்ன? இது யாவரும் அறிந்த இரகசியம். எண்ணாகமம் 14:24 இதை வெளிப் படுத்துகிறது. காலேப் முழு இருதயத்தோடும் ஆண்டவரைப் பின்பற்றினார். ஏனெனில் அவர் வேறே ஆவியை உடையவராயிருந்தார். இப்பொழுது இது மிக முக்கியமானது. இதை யோவான் 14:16,17 உடன் ஒப்பிட்டு, 'வேறொரு தேற்றர வாளன்' என்றுள்ளதை பார்க்கத் தவற வேண்டாம். ஆம், இதுதான் இரகசியம். ஆண்டவரைப் பின்பற்றத் தேவையான முழு பலமும், வ மையும் நம்மிடமில்லை. இவை பரிசுத்த ஆவியானவரிடம் உண்டு. பரிசுத்த ஆவியான வரின் நிறைவினாலும், நிரப்பப்படுவதினாலும் நாமும் காலேபைப் போன்று செயல்பட இயலும். நம்முடைய மகிமையுள்ள ஆண்டவரை நாமும் முழுமையாக, பூரணமாகப் பின்பற்றுவோம்!

## பாடம் 5 சவுல் - ஆவியுலக வலை
(வேதபாடம் - 1சாமுவேல் 28:3-25)

இந்த வேதபாடத்தைப் படித்தபின்னர், இதிலே பயமும், சோகரசமும் இணைந்து இருப்பதை ஒப்புக்கொள்வீர்கள். அதே வேளையில் இங்கு பண்டைக்கால, நவீனகால கள்ள உபதேச ஆபத்துக்கள் குறித்த எச்சரிப்பையும் காணலாம். ஏன் மக்கள் மாயம், மந்திர சூனியம் என்று ஈடுபட்டு அலைகிறார்கள்? சவுல் ஏன் அதைச் செய்தார்? ஏனெனில் அவர் கடவுளைவிட்டு விலகி, தூரம் போய், சோர்ந்துபோய், உபத்திரவத்தில் சிக்கிக் கொண்டிருந்தார். இன்றும்கூட மக்கள் பலர் துன்பமும், துக்கமும் அழுத்தும் வேளையில், ஆறுதல் தேடித் தங்களுடைய மரித்துப்போன அன்பானவர்களோடு பேச முயல்கின்றனர். எந்தோரின் மை போட்டுப் பார்க்கும் பெண் சாமுவேல் வந்து பேசுவார் என்று எதிர்பார்க்கவில்லை. ஒரு வேளை அவர் எழும்பி வரலாம் என்றிருந்தாள் என்பது நமக்குத் தெளிவாகிறது (வசனம் 12). இந்நிகழ்ச்சி அதிக சர்ச்சைக்குரிய ஒன்று எனலாம். மரித்தவர்களுடன் பேச முடியுமா? முடியாதா? என்பதே அது. இறந்தவர்களின் ஆவிகளோடு பேசுவதாகக் கூறும் மக்கள் கேட்கும் இரைச்சல்கள் யாவும் மரித்தவர்களைக் கட்டி வதைக்கும் அசுத்த ஆவிகளின் சத்தம்தான் என நம்புவதும் கடினம். இங்கு சாமுவேல் ஒரு கட்டப்பட்ட ஆவியல்ல, அவர் தோன்றி பேசினது குறிகாரிக்கும், சவுலுக்கும் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. ஏனெனில் இது கடவுளின் நேரடியான ஈடுபாடு எனலாம்.

இந்த ஆவியுலகம் குறித்தும், மாயலோகம் பற்றியும் ஏழு குறிப்புகள் உண்டு. இவை நாம் ஆவியுலகைப் புறக்கணிப்பதர்க்குரிய ஏழு காரணங்களை எடுத்தியம்புகிறது.

<u>1. ஆவியுலகப் போதனை என்பது சாத்தானின் வலைகளில் ஒன்று.</u> இது பிசாசினுடையது. கடவுளுடையதல்ல என்பது மட்டும் நிச்சயம். மக்களின் மனதைக் குருடாக்க வேண்டுமென்பதே சாத்தானின் முக்கிய நோக்கம். 2கொரிந்தியர் 4:4 பார்க்க. இந்த உலகில இன்று தோன்றியுள்ள பல்வேறு கள்ள மதங்கள், உபதேசங்களுக்கு இதுவே காரணமாகும். மக்கள் சத்தியத்தை அறியாதவாறு குருடாக்குவதே பிசாசின் வழியாகும். அவர்கள் பக்தியுள்ளோராக இருப்பதைக் குறித்தோ, சில கொள்கைகளை மிகக் கருத்தாய்க் கடைப்பிடிப்பதைப் பற்றியோ அவனுக்குக் கவலை இல்லை. அவர்கள் கடவுளின் சத்தியத்தை அறியாமல் இருட்டில் இருந்தால், அது மட்டும் போதும். ஆகவே நாம் எச்சரிக்கையாகவும், ஜாக்கிரதையாகவும் இருக்கவேண்டும்., ஆவியுலகம் என்பது சாத்தானின் கட்டுகளில் ஒன்று. அது மட்டுமல்ல, இது ஒரு வகையான சாத்தானின் வழிபாடு எனலாம். இந்த ஆவியுலகில் அலைசடிபடும் மக்கள் அல்லது வேறுவகையான மாய, தந்திரங்களை நம்புகிற யாவரும் கடவுளின் வெளிப்பாட்டைத் தள்ளிவிட்டுப் பிசாசின் பொய்களை நம்புகின்ற வர்கள். 2தெசலோனிக்கேயர் 2:1-12

<u>2. ஆவியுலக போதனையைப் பின்பற்றுதல் என்பது அவிசுவாசத்தையும், பின் மாற்றத்தையும் சுட்டிக்காட்டுகிறது.</u> சரியானபடி மனந்திரும்பாத, ஆண்டவரோடு, சரியான தொடர்பில்லாத கிறிஸ்தவன் இந்த ஆவியுலக போதனைக்கு இழுப்புண்டுப் போக வாய்ப்பு உண்டு. இந்த ஆவிகளுடன் தொடர்புள்ள எவராயினும், எங்கிருப்பினும் அவர்கள் அவிசுவாசி களாயிருப்பர் அல்லது ஆண்டவரோடுள்ள தொடர்பை இழந்தோராக, வசனம் 6 இல் கூறப்பட்ட சவுலைப் போன்றிருப்பர். கிறிஸ்தவனுக்குத் துன்பம், துக்கம் நேரிடும்போது, எல்லாம் வல்ல ஆறுத ன் கடவுளை விட்டுப் பிரிந்து, இந்தப் பிரபஞ்சத்தின் அதிபதியிடம் தஞ்சம் புகுவது எவ்வளவு பரிதாபமானது! 2 கொரிந்தியர் 1:3,4

<u>3. ஆவியுலக போதனை அதிகரித்து வருகிறது. இது கடைசிகால அடையாளங்களில் ஒன்றாகும்.</u> மற்றெல்லாக் காலங்களைவிட இக்காலத்தே இந்தக் கள்ள உபதேசம் அதிகமாகி பெருகியுள்ளது. ஒரு வகையில் இது நம்மை ஊக்கப் படுத்துகிறது. ஏனெனில் இது நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகை சமீபமாக உள்ளதென்று அறிவிக்கின்றது - 1தீமோத்தேயு 4:1,2 பார்க்கவும். நாம் கடைசி காலத்தில் வாழ்கிறோமென்று இது காட்டுகிறது. ஆவியுலக காரியங்களில் அதிகமான ஏமாற்றுவேலை இருப்பினும், அதிலும் உண்மை உண்டு. மரித்தவர்களோடு பேசச் செல்லும் மக்கள் மரித்த அவர்களது அன்பானவர்களின் முனகல் சத்தம் கேட்கின்றனர். சில காட்சிகளைக் காண்கின்றனர். அவர்கள் கேட்பது தங்களுடைய அருமையானவர்களின் சத்தமென்று நினைத்து ஏமாந்து போகின்றனர். தங்களுக்கு அருமையானவர்களின் உருவம் என்றும் எண்ணி ஏமாறுகின்றனர். இது எப்படி? சாத்தானுக்கு அறிவு அதிகம். ஆண்டவரை விட்டுப் பிரிந்து, கடவுளின் கட்டளையை மீறும் எந்த மனிதனிடத்தும் ஏதோ ஒரு ஆவியை அனுப்புவது அவனுக்கு எளிது.

<u>4. ஆவியுலக போதனை என்பது, மாம்சத்தின் கிரியைகளில் ஒன்று என வேதம் குறிப்பிட்டுள்ளது.</u> கலாத்தியர் 5:19,20 வாசிக்கவும். நிச்சயமாக இது ஆவியின் கனிகூறும் பண்புகளில் ஒன்றல்ல. கலாத்தியர் 5:22,23 பார்க்க. தன்னைக் கிறிஸ்தவன் என்று கூறிக்கொண்டு, ஆவியுலக போதனையை நம்பி அல்லாடிக் கொண்டிருக்கும் எவனும், 'நான்

மந்திரவாதம் (பில்லி சூனியம்) என்னும் இந்த மாம்சத்தின் கிரியைக்குச் சிலுவையில் அறையப்பட் டுள்ளேனா? என்று கேட்டுக் கொள்ள வேண்டும். கலாத்தியர் 5:24,25 பார்க்கவும்.

5. ஆவியுலக போதனை ஆண்டவருக்கு அருவருப்பு. ஆகவே இது முற்றுமாக, கண்டிப்பாகச் செய்யத் தகாததென அவருடைய வார்த்தை கூறுகிறது. கடவுளின் சத்தியத்தை அறியும்படி ஒரு காலத்தே கண் திறக்கப்பட்ட ஒருவன், தேவ வசனம் இந்தத் தீமைக்கெதிராக எச்சரித்துத் தடை செய்திருக்கும்போது, இந்த ஆவியுலகச் சோதனைக்கு எவ்வாறு திரும்ப முடியும்? கீழ்க்கண்ட வேதபகுதிகளைக் கவனமாய்ப் படிக்கவும். யாத்திராகமம் 22:18, லேவியராகமம் 19:26,31; 20:6,7; உபாகமம் 18:10-12; 2நாளாகமம் 33:6; ஏசாயா 8:19,20; அப்போஸ்தலர் 16:16-18;19:19 இத்துடன் இந்தப்பாடத்தில் கூறப்பட்டுள்ள ஆவியுலகப் போதனைப் பற்றிக் கூறப்பட்டுள்ள வசனங்களையும் படித்துப் பாருங்கள்.

6. ஆவியுலகப் போதனை கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிரி. ஆவியுலகப் போதனையை பரப்பி, அதிலுள்ள முறைகளைக் கையாண்டுவரும், பெயர் கிறிஸ்தவ சபைகள், பெயர்க் கிறிஸ்தவர்கள், 'ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு வரும்' ஓநாய்கள் எனலாம். மத்தேயு 7:15. உண்மையான ஆவியுலகப் போதனைக்குரிய மனிதன், கடவுளின் வார்த்தையைப் புறக்கணிக்கிறவனாக இருக்க வேண்டும். இப்படிச் செய்கிற எவனும் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிரியாக இருக்கிறான். கீழேயுள்ள குறிப்புகளைப் பாருங்கள்.

1. ஆவியுலகப் போதனைக்காரன் வேதாகமத்தின் ஆதாரத்தையும், அதிகாரத்தையும் புறக்கணிக்கிறான். 2. கடவுள், கிறிஸ்து, தூய ஆவியானவர், திருச்சபை என்பதை அவன் வேதத்திற்குப் புறம்பானது என்று நினைக்கிறான். தேவ நிந்தையாகவும் எண்ணுகிறான். 3. கிறிஸ்துவின் இரத்தித்தினால் மீட்பு கிட்டும் என்பதை ஏற்றுக் கொள்ளமாட்டான். 4. கிரியையினாலே இரட்சிப்பு கிட்டும் என்று நம்புவான். 5. பிசாசு, அசுத்த ஆவிகள், நியாயத்தீர்ப்பு, நரகம் போன்றவற்றைப் புறக்கணிப்பது என்பது பாவத்தைக் குறைவாக மதிப்பிடுவதாகும்.

7. ஆவியுலகப் போதனை ஏமாற்றம் தரும். இது மாயையான இருள். முடிவில் அழிவைத் தரும். இது சரீரத்தையும், மனதையும். ஒழுக்கத்தையும், ஆவிக்குரிய வாழ்வையும் முடிவில் நித்தியத்தையும் கெடுத்துவிடும். வெளிப்படுத்தல் 21:8; 22:15 ஒப்பிட்டுப் பார்க்க. இந்த ஆவியுலகப் போதனையாருடன் உங்களுக்கு ஏதாவது தொடர்பு இருப்பின் உடனடியாக அதை முழுமையாக விட்டு விலகுங்கள். 2கொரிந்தியர் 6:14-18 படிக்கவும். நீங்கள் அறிந்த யாராவது இந்த ஆவியுலகப் போதனையுடன் தொடர்புள்ளவராக இருப்பின் அல்லது ஆவியுலகப் போதனையில் மாட்டிக் கொண்ட எவராவது இருப்பின் அவர்களுக்கென ஜெபிக்கவும். 1நாளாகமம் 10:13,14ஐப் படிக்க மறவாதீர். நாங்கள் இம்மட்டாய் கரிசனையோடும், கவனத்தோடும், நிச்சயத்தோடும் கூறிய யாவும் எல்லா மாய, மந்திரீகங்கட்கும் பொருந்தும். பல ஆண்டுகட்கு முன்னர் முனைவர் எ. டி. பியர்சன் என்பர் எச்சரிப்புக் கொடுத்துள்ளார். கடைசியாக, '...நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்' (1யோவான் 4:1) இவற்றை நாம் சோதித்தறிவது எப்படி?

1. அவர்கள் கூறுவன யாவும் வேதாகமத்திற்கு இசைந்ததாக உள்ளதா? ஏசாயா 8:19,20) 2. அவை மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்கின்றனவா? (1யோவான் 4:3) என்று சோதித்தறியுங்கள்

## பாடம் 6 சேபாவின் இராணி: இராஜ தரிசனம்
### வேதபாடம் 1 இராஜாக்கள் 10:1-13

*இராஜாவைத் தரிசிக்க இந்த இராணி சென்ற அழகிய வரலாற்றைத் துல்லியமாக மத்தேயு 12:42 இல் ஆண்டவர் இயேசு உறுதிப்படுத்தியுள்ளார். இவள் பெரிய பணக்காரி, இன்று எத்தியோப்பியா என அழைக்கப்படும் நாட்டில் வாழ்ந்தார். இவள்,அந்த நாட்டை அரசாண்டவள். சாலொமோன் இராஜா எருசலேமிலே ஆண்டு வந்தார். அவர் பெரிய பணக்காரர், வ மைமிக்கவர் மட்டுமல்ல, பெரிய ஞானியுங்கூட. எருசலேமுக்கும், எத்தியோப்பாவுக்கும் இடையே கடல் வழியாகவும், தரை வழியாக ஒட்டகங்கள் மூலம் வர்த்தகம் நடந்து வந்தது. நறுமணம் வீசும் வாசனைப் பொருட்கள், விலையேறப் பெற்ற கற்கள், பொன் போன்றவை அதிக அளவில் வியாபாரமானது. இந்த அரசனைக்காண அரசியும் இந்த ஒட்டகப் பாதை வழியே பயணமானார். மனதைக் கொள்ளை கொள்ளும் அழகான இந்த வரலாற்றைப் படிக்கும்போது, சாலொமோனிலும் பெரியவரெனத் தம்மை அறிக்கையிட்ட நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் ஒவ்வொரு மனிதனும் எவ்வாறு அவரை அறிந்து, தனது இவ்வுலக வாழ்விற்கும மற்றும் நித்திய வாழ்வுக்கும் தேவையான யாவற்றிற்கும் அவரிடம் படிப்படியாக வரும் விதத்தைக் காணலாம்.*

*<u>1. அவள் கேள்விப்பட்டது என்ன?</u> வசனம் 1 இல் அவள் இராஜா சாலொமோனின் கீர்த்தி, ஞானம், செல்வம் குறித்துக் கேள்விப்பட்டாள். 1இராஜாக்கள் 4:29-31 படிக்கவும். இவை எல்லாவற்றையும் குறித்து அவள் எப்படிக் கேள்விப்பட்டாள் என்று நமக்குத் தெரியாது. ஒரு வேளை யாராகிலும் வடக்கேயிருந்து கடல் மார்க்கமாக கப்பல் மூலமாகவோ அல்லது தரை வழியாக ஒட்டகம் மூலமாகவோ பயணப்பட்டு வந்து இந்த இராணியிடம் இராஜாவைப் பற்றிக் கூறியிருக்கலாம். எல்லாவிதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்கட்கு முதற்படி கேள்விப்படுதலாகும். யோவான் 5:24, ரோமர் 10:17 படிக்கவும். நீங்கள் கிறிஸ்துவிலுள்ள கடவுளின் அன்பையும், நமது இராஜாவான ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கீர்த்தியையும் குறித்துக் கேள்விப்பட்டதுண்டா? நம்மில் அவரைக் குறித்துக் கேள்விப்பட்ட வர்களுக்கு எவ்வளவு பெரிய பொறுப்பு காத்துக் கொண்டுள்ளது என்பதை அறிவீர்களா? ரோமர் 10:12-15 வரைப் படிக்கவும்.*

*<u>2. அவள் செய்தது என்ன?</u> 'மிகுந்த பரிவாரத்தோடும், கந்தவர்க்கங்களையும், மிகுதியான பொன்னையும், இரத்தினங்களையும் சுமக்கிற ஒட்டகங்களோடும், எருசலேமுக்கு வந்தார்.....' என்று வசனம் 2இல் காண்கிறோம். என்னே கண் கொள்ளாக் காட்சி இது! வசதிக் குறைவான அந்தப் பழங்காலத்தே, ஒரு இராணிக்கு இந்தப் பயணம் நெடியதாகவும், கடினமானதாகவும் இருந்திருக்கும்! எந்தப் பயணமாயினும் இது இராஜாவிடம் நடத்துமாயின் அதுவே மேன்மையான தாகும்! இன்று மக்கள் பலர் அவரைக் குறித்துக் கேள்விப்படுகின்றனர். ஆனால் அவரகள் அவரிடம் வருவதேயில்லை. இது எவ்வளவு வேதனைக்குரியது! அவரது அழைப்புத் தெளிவானது. (மத்தேயு 11:28) அவரது உறுதிமொழி நிச்சயமானது (யோவான் 6:37) அப்படியிருந்தும் அவர்கள் அவரிடம் வருவதில்லை - யோவான் 5:40 பார்க்கவும். அவர் அற்புதமான இரட்சகர், இராஜா என்பதை நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? அவர் உங்களுக்குத் தேவை என்று உணர்ந்ததுண்டா? அப்படியிருந்தும் இன்னமும் அவரிடம் நீங்கள் வாராதிருப்பதென்ன? அந்த இராணி தன் உள்ளத்தை இராஜாவுக்கென திறந்தார் (வசனம் 2) தனது கேள்விகள், பிரச்சனைகள் யாவற்றையும் அவருக்கு முன்பாக வைத்தார் (வசனம் 1) நமது இக்கட்டான வேளையில் நாம் யாரிடம் செல்லமுடியும்? யோவான் 6:68 படிக்கவும்.*

*<u>3. அவள் கண்டுகொண்டது என்ன?</u> வசனம் 3 இல் இதைக் காணலாம். அவள் கேட்ட யாவிற்கும் சாலொமோன் பதிலளித்தார். அவளுக்குப் பதில்கூற இயலாத ஏதும் அவருக்கு இல்லை. இது முழுக்க முழுக்க ஆண்டவர் இயேசுவுக்குப் பொருந்தும். கொலோசெயர் 2:3 படிக்கவும். அவர் ஒருவரே நம் வினாகட்கு அதிகாரத்தோடும் பதில்கூற வல்லவர். நம்முடைய பிரச்சனைகட்குத் தீர்வு காண வல்லவர். சில எடுத்துக்காட்டுகள் இதோ:....*

*1. எனது பாவங்களிலிருந்து எவ்வாறு மன்னிப்படைய முடியும்? அப்போஸ்தலர் 13:38*
*2. நான் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும்? பதில்: அப்போஸ்தலர் 16:31 3.*
*வேறு யாராகிலும் என்னை இரட்சிக்க முடியுமா? பதில்: அப்போஸ்தளர் 4:12*
*4. அவர் என்னை நிச்சயமாக ஏற்றுக் கொள்வாரா? பதில்: யோவான் 6:37*
*5. வினா: என் பாவங்களைக் கழுவுவது எப்படி? பதில்: 1யோவான் 1:7*
*6. வினா: நான் இரட்சிக்கப்பட கிரியை அவசியமா? பதில்: ரோமர் 4:5*
*7. வினா: இப்பொழுதே நான் அவரிடம் கேட்கலாமா? பதில்: ரோமர் 10:13*

*<u>4. அவள் பார்த்தது என்ன?</u> வசனங்கள் 4,5 இல் இதைப் பற்றி அறியலாம்.*

*1. அவரது ஞானத்தைக் கண்டாள் - 1கொரிந்தியர் 1:24, எபேசியர் 1: 8*
*2. அவரது அரமணையைக் கண்டாள்- நமது இராஜா கட்டிக்கொண்டிருக்கும் அற்புதமான மாளிகை பற்றி உங்களுக்குத் தெரியுமா? எபேசியர் 2:19-22 3. அவரது மேசையிலிருந்த உச்சிதங்களைக் கண்டாள்- சங்கீதம்23:1,34:10 4. அவரது வேலையாட்களைக் கண்டாள். பானபாத்திரக்காரர், அவரது ஊழியர்கள் அவர்களது உடைகளைக் கண்டாள். 5. அவர் செலுத்திய தகனபலிகளைக் கண்டாள். எபிரெயர் 10:19-22 உடன் ஒப்பிடுக.*

*இவற்றையெல்லாம் கண்ட இராணிக்கு என்ன நேர்ந்தது? வசனம் 5 இதைப்பற்றிக் கூறுகிறது. அவள் மேற்கொள்ளப்பட்டாள். தாழ்த்தினாள், ஆண்டவரைப் பார்க்கும் போது ஏற்படும் விளைவு வெகு தாழ்மையே! யோபு 40:4; ஏசாயா 6:5, அப்போஸ்தலர் 9:4 வெளிப்படுத்தல் 1:17 ஒப்பிட்டுப் படிக்கவும்.*

*<u>5. அவள் சொன்னது என்ன?</u> இதை வசனம் 6 முதல் 9 வரை படித்து அறியலாம். கிறிஸ்துவிடம் வந்து, அவரை ஆண்டவராகவும், இரட்சகராகவும் நம்பி ஏற்றுக் கொள்ளும் எவரும் இவ்வாறே கூறுவர்.*

*1. அவள் கூறியது. 'நான்.....கேட்ட செய்தி மெய்யாயிற்று' யோவான் 4:42 படிக்கவும் 2. அவள் கூறியது: நான் வந்து காணுமட்டும்....நான் நம்பவில்லை*
*3. அவள் கூறியது: 'இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை'*

*தனக்கு இல்லாத ஒரு பெரும் பாக்கியத்தை இராஜாவின் ஊழியர் பெற்றுள்ளதாக சேபாவின் அரசி உணர்ந்ததாக வசனம் 8 இல் காண்கிறோம். அவரை அறியாதவர்கள் வாஞ்சிக்கும் ஒன்றை, நம்மிடம் இல்லாத ஒன்றை கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள், அனுபவிக்கிறார்கள் என்று நீங்கள் உணருகின்றீர்களா?*

*<u>6. அவள் கொடுத்தது என்ன?</u> பொன், கந்தவர்க்கம், இரத்தினங்கள் போன்ற வற்றைக் கொடுத்தாள். அதுவும் மிகுதியாகக் கொடுத்தாள் என்று வசனம் 10 இல் காண்கி றோம். இவ்வளவு விலையேறப்பெற்ற ஈவுகளை நம்மில் பலர் ஆண்டவருக்குக் கொடுத்ததேயில்லை. ஆயினும் இவ்வுலகத்தைவிட மேலான ஒன்றை நாம் நம்மிடம் வைத்துக கொண்டுள்ளோம். இதை நாம் அவருக்குக் கொடுக்க முடியும் - மாற்கு 8:36 படிக்கவும். உங்கள் ஆத்துமாவை, உங்கள் வாழ்வை அவருக்கென நீங்கள் கொடுத்ததுண்டா? 'அவரது அன்பு மேலானது. அதற்கீடாக என் ஆத்துமா, ஜீவன், எனக்குள்ள யாவும் கொடுப்பேன்' என்போமா? வசனங்கள் 11,12 ஐப் படித்து, 2கொரிந்தியர் 5:14 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.*

*<u>7. அவள் பெற்றுக்கொண்டது என்ன?</u> அவள் தாராளமாக இராஜாவுக்குக் கொடுத்தாள். அதற்கு ஈடாக இராஜா அவளுக்குக் கொடுத்தது என்ன? வசனம் 13 படியுங்கள்*

*1. 'விருப்பப்பட்ட எல்லாவற்றையும் கொடுத்தான்' - சங்கீதம் 37:4 படிக்கவும்*

*2. 'கேட்டது எல்லாவற்றையும் கொடுத்தான்' - யோவான் 14:13,14 படிக்கவும்*

*3. 'வெகுமதிகள் கொடுத்தான்' - பி ப்பியர் 4:19 படிக்கவும்.*

*அவள் எவ்வளவு நிறைவுடன் சென்றாள்! நீங்கள் எப்படி?*

## பாடம் 7 ஒபதியா - கர்த்தரின் ஊழியன்
(வேதபாடம்: 1இராஜாக்கள் 18:1-16)

பழைய ஏற்பாட்டில் பதின்மூன்றுக்கும் மேற்பட்ட 'ஒபதியா' என்ற பெயருள்ள வர்கள் இருக்கின்றார்கள். ஆனால் நம் பாடத்தில் நாம் படிக்கப்போகும் ஒபதியா 1இராஜாக்கள் 18:1-16 வரையுள்ள பகுதியில் கூறப்பட்டுள்ளவன். ஒரு அதிபதி. ஆகாப் அரசனின் அரமணை விசாரிப்புக்காரன். இந்த ஆண்டவரின் ஊழியனைக் குறித்துச் சிலர் இழிவாகக் கூறியுள்ளனர். ஆனால் இவன் கர்த்தருக்குப் பயந்தவன் (வசனம் 3) எனவும், 'சிறு வயதுமுதல் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவன்' (வசனம் 12) எனவும் கூறக் காண்கிறோம். இந்த மனிதனிடமும் குறைவுகள் உண்டு. இவன் எ யா அல்ல. இவனிடம் நல்ல குணங்கள் பல இருந்ததை நாம் காண்கிறோம். கள்ள உபதேசமும், விக்கிரக வழிபாடும் ஒழுக்கக் கேடும் நிறைந்த காலத்தே இவன் கர்த்தருக்குப் பயந்தவனாக இருந்தான். ஆகாப் இராஜாவைப் பார்க்க வேண்டுமென விரும்பி எலியா ஒபதியாவிடம் சொல்லியனுப்பினபோது, அவன் மிகவும் பயந்தான். பின்னர் பயம் நீங்கப் பெற்று ஆகாபைச் சந்தித்துச் செய்தி கூறினான் (வசனம் 16) இந்தச் சம்பவத்தி ருந்து நாம் சில பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம்.

<u>1. ஒபதியா சிறு வயதிலேயே கர்த்தரை அறிந்திருந்தான்.</u> இதை நாம் வசனம் 3, 12 இல் காண்கிறோம். இந்த வசனங்கள் மூலம் நாம் அறிவது என்ன? ஒபதியாவுக்குப் பக்தியுள்ள பெற்றோர் இருந்தனரா? அவனுக்குக் 'கர்த்தருடைய ஊழியன்' என்கிற அர்த்தமுள்ள பெயரை வைத்ததி ருந்து இது உறுதியாகிறது. நல்ல பரம்பரை! 2தீமோத்தேயு 3:15 படிக்கவும். நம் பிள்ளைகள் கர்த்தரை அறிந்து கொள்வது என்பது எவ்வளவு ஆசீர்வாதம்! இயேசுவை அறிந்து அவரிடம் வருவதற்கு மிக இளம் வயது என்றோ, மிகவும் முதிர்ந்த வயது என்றோ இல்லை. யோவான் 3:4 படிக்கவும். வாழ்வின் முதிர்வயதில் இரட்சிக்கப் பட்டோரைவிட இளம் வயதில் இரட்சிக்கப்பட்டோரே எண்ணிக்கையில் அதிகம். நற்செய்தியாளர் ஒருவர், தம்முடைய கூட்டத்திற்கு வந்திரும்த 4500 பேரைக் கொண்டு ஒரு கணிப்பு நடத்தினார். அக்கூட்டத்தி ருந்த பல்வேறு வயதுள்ளோர் எப்போது ஆண்டவர் கிறிஸ்துவிடம் வந்தனர் என்ற கணக்கெடுப்பு நடத்தினார். அதன் முடிவுகள் இதோ:

வந்திருந்தோரில் 400 பேர் 10 வயதிற்குள் இரட்சிக்கப்பட்டவர்கள்.
600 பேர் 10 முதல் 14 வயதிற்குள் இரட்சிப்படைந்தோர்.
1000 பேர் வயது 16-20க்குள் இரட்சிக்கப்பட்டவர்கள்.
24 பேர் 36 வயதிற்கு மேல் இரட்சிப்படைந்தோர்.
கூட்டத்தி ருந்த மீதியான மக்கள் யாவரும் இரட்சிக்கப்படாதோர்.

சிறுவர், சிறுமியர் இளம் வயதிலிருக்கும் போதே அவர்களுக்குச் சுவிசேஷத்தைக் கூறி அவர்களை கிறிஸ்துவிடம் வழிநடத்தவேண்டுவது எவ்வளவு முக்கியமான பணி. பிரசங்கி 12, நீதிமொழிகள் 22:6ஐப் படித்து ஒப்பிட்டுப் பார்க்கவும்.

<u>2. ஒபதியா, கர்த்தரை அறிந்ததோடன்றி, அவருக்கு மிகவும் பயந்திருந்தான்.</u> அவன் பக்தி வைராக்கியத்தோடும், ஆர்வத்தோடும், அர்ப்பணிப்போடும் கடவுளை வணங்கினான். இதையே கடவுள் தம்முடைய பிள்ளைகளிடம் எதிர் பார்க்கிறார் - உபாகமம் 5:29ஐப் படித்து, நீதிமொழிகள் 1:7, 8:13, 10:27, 14:26, 15:16, 19:23 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். கர்த்தருக்குப் பயப்படுதல் என்பது அடிமைத்தனத்தின் பயமல்ல. அவரை நேசித்து, அவருக்குப் பிரியமாக நடக்க வாஞ்சிக்க வேண்டும். அவரைத் துக்கப்படுத்துவதற்குப் 'பயப்பட' வேண்டும். பயம் என்பது நம்மைப் பிடிக்கும் ஒரு உணர்வு. கர்த்தருக்குப் பயப்படுதல் என்பது, அவரைத் துக்கப்படுத்தும், கனவீனமாக்கும் ஒவ்வொரு செயலுக்கும் நாம் எதிர்த்து நிற்க வேண்டும் என்பதே.

<u>3. ஒபதியா, பல வருடங்களாகக் கர்த்தரை உண்மையோடு தொடர்ந்து பின்பற்றுபவன்.</u> வசனம் 12 இல் 'முதல்' என்கிற வார்த்தையைக் கவனிக்கவும். ஒபதியா சிறுவனாகக் கடவுளை நம்பினான். அவருக்கென ஊழியம் செய்ய ஆரம்பித்தான். பின்பு பல வருடங்களாக அதையே தொடர்ந்து செய்து வந்தான். அப்போஸ்தலர் 26:22ஐ லூக்கா 9:62 உடன் ஒப்பிடுக. காரியத்தைத் தொடங்குவது என்பது பெரிய காரியம். அதனினும் பெரிது தொடர்ந்து அதிலே முன்னேறிச் செல்வதாகும்! சங்கீதம் 36:3ஐ யோவான் 8:31, 15:9, அப்போஸ்தலர் 13:43; 14:22, கொலோசெயர் 1:23 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். ஆரம்பித்து, தொடர்ந்து முன்னேறிச் செல்பவனே வெற்றி பெறுவான்.

*<u>4. ஒபதியா, ஒரு கடினமான சூழ ல், இக்கட்டான வேளையில் ஆண்டவருக்கென வாழ்ந்து, ஊழியம் செய்து வந்தான்.</u> ஆகாபின் அரமணையில் ஆண்டவருக்குப் பயப்படும் ஒரு மனிதன் தலைமை விசாரிப்புக்காரனாக இருந்தான். அதுவும் இராஜா ஆகாபுக்கும், அவனது மனைவி சூழ்ச்சிக்காரியான யேசபேலுக்கும் வேலை செய்யும் முக்கிய பொறுப்புள்ளவனாக இருந்தான். இதை விட்டுவிட்டு வேறே வேலைக்குப் போவது ஒபதியாவுக்கு நன்றாயிருந்திருக்குமோ? தேவையில்லை. யோசேப்பு (ஆதியாகமம் 41:41), தானியேல் (தானியேல் 2:48) மொர்தேகாய் (எஸ்தர் 2:19) இராயனின் அரமணையி ருந்த பரிசுத்தவான்கள் (பி ப்பியர் 4:22) போன்றோரைக் குறித்துக் கூறப்பட்டுள்ளதைப் பாருங்கள். நம்மை ஆளுகை செய்கின்ற அரசர்களை, யாராயினும் ஆகாபோ, நீரோவோ, நாம் அவர்களைக் கனம் பண்ணவேண்டும். 1பேதுரு 2:17 பார்க்கவும்.*

*<u>5.ஒபதியா, ஆண்டவரின் பிள்ளகளால் நன்கு அறியப்பட்டிருந்தான்.</u> மிகுந்த தைரியத்தோடும், கரிசனையோடும் அவன் செய்த காரியமே இதற்குச் சான்று. இயல்பாகவே ஒபதியா பயந்த சுபாவத்தினன் - வசனங்கள் 4,13 படிக்கவும். அவன் தீர்க்கதரிசிகள் மீது பரிவு கொண்டு, அவர்களைப் பாதுகாத்து, பராமரித்து வந்தான். இது மிகவும் துணிச்சலான செயல். இந்த தைரியமான செய னால் அநேகர் பாடு, பட்டினி, மரணத்தினின்று காக்கப்பட்டனர். முழுவதும் வேற்றாள் போல கருதப்படும் சூழ ல் மிகுந்த தைரியத்தோடும், கரிசனையோடும் வாழ்ந்து, ஆண்டவருக்கென ஊழியம் செய்துவரும் மக்களை நாம் இன்று நம் ஜெபங்களில் நினைவுகூர வேண்டும்.*

*<u>6. ஒபதியா, ஆண்டவரில் அன்புகூர்ந்து, அவருக்கென ஊழியம் செய்து வந்தாலும், அவனும் மனிதன்தானே!</u> இதை நாம் வசனங்கள் 5-16 வரைக் காண்கிறோம். எ யா இரும்பு மனிதர். கடவுளின் வல்லமையான, தைரியமிக்க ஊழியர். இருப்பினும் சாதாரண மனிதன்தான்! 1இராஜக்கள் 19:1-3ஐ யாக்கோபு 5:17 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். அவர் 'நம்மைப் போல பாடுள்ள மனுஷன்'. நாம் வேதாகமத்தைப் படிக்கும்போது, கடவுள் தம் ஊழியத்திற்கென தெரிந்தெடுத்து, பயன்படுத்திய மக்கள் யாவரும் தனிப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்தனர் என்று காண்கிறோம். கடவுள் அவர்களை உருவாக்கிப் பயன்படுத்தினார். ஆண்டவர் அவர்களை உருவாக்கா திருந்தால் அவர்களும் நம்மைப் போன்றச் சாதாரண மக்களே. இது நமக்கு ஊக்கமளிக்கும் உண்மை எனலாம். இதை உறுதிப்படுத்தி, தொடர்புபடுத்தும் நல்ல வசனங்களை 2கொரிந்தியர் 3:5,6 இல் காணலாம். இதை 1கொரிந்தியர் 1:26-31வரைப் படித்து ஒப்பிட்டுப் பார்க்கவும்.*

*<u>7. ஒபதியா, தன்னுடைய இராஜ விசுவாசத்தினால், தன்னையறியாமலேயே ஆண்டவருக்கென ஒரு பெரிய, பலத்த வெற்றியைக் கொண்டு வந்தான்.</u> வசனங்கள் 15,16 இல் இதைக் காண்கிறோம். கடவுளின் கிரியையிலே ஒபதியாவின் சேவை மிக முக்கியமானதாக இதைக் காண்கிறோம். நாளின் இறுதியில், அவனும் சங்கீதக்காரனைப்போல சங்கீதம் 71:17,18 இல் உள்ளது போல ஜெபிக்கமுடியும் என்பது <u>உறுதி!</u>*

## பாடம் 8 மனாசே: பழைய ஏற்பாட்டின் கெட்டகுமாரன்
வேதபாடம்: 2நாளாகமம் 33:1-13

*மனாசேயின் கதை நம் உள்ளத்தைத் தொடுவதாகவுள்ளது. ஏனெனில் இது இக்கால மக்களிடையே கடவுளின் ஈடுபாட்டைப் பிரதிப ப்பதாகவுள்ளது. கடவுளைக் குறித்த எண்ணமோ, இடமோ, நேரமோ மனாசேயிடம் இல்லை. சொல்லப் போனால், வெளிப்படையாகவே அவன் கடவுளை மாசு படுத்தினான் எனலாம். இருப்பினும் அற்புதமான முறையில் ஆண்டவர் கூறிய கெட்டகுமாரன் உவமையில் வருவதுபோல, 'அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, 'எழுந்து புறப்பட்டுத் தன் தகப்பனிடத்தில் வந்தான்' - லூக்கா 15:11-24 வரைப் படித்துப் பார்க்கவும். மனாசேயின் கதையின் முன்பகுதியைப் படிக்கும்போது, 'இப்படிப்பட்ட கொடிய மனிதனுக்கு நிச்சயமாக எவ்வித நம்பிக்கையும் இல்லை' என்றே நாம் கூறிக்கொள்வோம். ஆனால் தொடர்ந்து படிக்கும்போது, நாம் கடவுளின் மாறாத கிருபை எவ்வளவு அற்புதமானது என்று கண்டு கொள்வோம். அதாவது மீட்கப்படக்கூடாத நிலையில் எவரும் மிகக் கெட்டவர்களாக இல்லை எனவும் அறியலாம். கடவுளின் கிருபை இதைச் செய்கிறது! மனாசேயின் கதையை நாம் மூன்று பிரிவாகப் பிரித்துப் படிக்கலாம்.*

1.கடவுள் நேசிக்கும் மனிதன்

*யார் இந்த மனாசே? இவன் யூதாவின் அரசன். இவன் மிக இளம் வயதிலேயே - பன்னிரண்டு வயதிலேயே அரியணைக்கு வந்தவன். இவன் 55 வருடங்கள் அரசாண்டு. தனது 67 ஆம் வயதில் மரணமடைந்தான். இவனது தகப்பன் எசேக்கியா. இவன் கர்த்தருக்கு முன்பாக நீதியாய் நடந்தான் என்று நாம் இவனைக் குறித்துப் படிக்கின்றோம். 2நாளாகமம் 31:20 படிக்கவும். ஆகவே மனாசே பக்தியுள்ள பரம்பரையில் வந்தவன். ஆயினும் ஒரு மனிதனுடைய பெற்றோர் தேவ பக்தியுள்ளவர்களாக இருந்தால், அவனும் ஆண்டவருக்குப் பயந்து வளருவான் என்று உறுதியாகக் கூற முடியாது. எசேக்கியாவின் மகன் மனாசே, இவன் தன் காலத்தே வாழ்ந்தவர்களிலே மிகவும் மோசமானவனாக மாறினான் என்று வரலாற்றில் அறிகிறோம். இவன் மகா பெரிய பாவியாக இருந்தான், இவன் லூக்கா 5:12 இல் ஆண்டவர் இயேசுவிடம் வந்த 'குஷ்ட ரோகம் நிறைந்த' மனிதனைப் போ ருந்தான். ஆயினும் கடவுள் அவனை நேசித்தார்! 2நாளாகமம் 33:2-9 வரை படித்துப் பாருங்கள். அதிலே இவன் எவ்வளவு கொடியவன் என்று காணலாம். இவ்வளவு மோசமாக இருந்தும் கடவுள் இவனை நேசித்தார். இவனது இரட்சிப்பிற்காக ஏங்கினார். கடவுள் மனாசேயின் பாவத்தை வெறுத்தார். ஆனால் மனாசேயை நேசித்தார். மத்தேயு 9:13, லூக்கா 15:2, 19:10, 1தீமோத்தேயு 1:15 படிக்கவும். ஏசாயா 53:6, ரோமர் 3:23 இன்படி நாம் யாவரும் பாவிகள் என்று அறிகிறோம். நமது பாவத்திற்கு தண்டனை மரணம் - ரோமர் 6:23 பார்க்க. இருப்பினும் கடவுள் நம்மில் அன்பு கூர்ந்து, தம்முடைய தயவினாலே நம்மை மனந்திரும்பி, தம்மிடம் வர அழைக்கிறார். ஏசாயா 1:18, 55:6,7 படிக்கவும். மனாசே வழிதப்பிப் போனாலும், கடவுள் அவனோடு பேசினார். வசனம் 10 படிக்கவும். கடவுள் அவனை நேசித்தார். அவன் நலனில் அக்கறை காட்டினார் என்பதற்கு இது ஆதாரம். கடவுள் அவனை நேசிக்காமல் இருந்திருந்தால் அவனை அப்படியே தனிமையில் தவிக்க விட்டிருப்பார். அதனால் கடவுள் என்ன செய்தார் தெரியுமா?*

**II** கடவுள் கையாளும் முறை.

*மனாசேயைக் கடவுள் நேசித்தபடியினால், அவனைத் தள்ளிவிடவில்லை. அவர் செய்த மூன்று காரியங்கள் உண்டு. அவையாவன:*

*1. அவன் தானாகச் சுழன்று தன்னுடைய முடிவுக்கு வரட்டுமென அவர் அவனை விட்டு விட்டார். கெட்ட குமாரனுக்கு நடந்ததும் இதுதானே! வீட்டைவிட்டு வெளியேற வேண்டுமென்ற மகனின் தீர்மானத்திற்குத் தகப்பன் தடையாக நிற்கவில்லை. அவன் தன் வழியே சென்று பாவத்தின் விளைவை அனுபவிக்கட்டும் என்று அவனை அவன் வழி செல்ல விட்டு விட்டார். லூக்கா 15:12,13 படிக்கவும்.*

*2. அவனுக்கு எச்சரிப்பைக் கொடுத்தார் - மீண்டும் வசனம் 10 படிக்கவும். வேதாகமத்திலேயே மிகவும் பயங்கரமான எச்சரிக்கை வசனத்தை நீதிமொழிகள் 29:1 இல் காண்கிறோம். கடவுள் நம்மைக் கடிந்து கொண்டு எச்சரிப்பது நம் மேலுள்ள அவரது அன்பையும் கரிசனையையும் காட்டுகிறதல்லவா! மனாசேயின் வாழ்விலும் இது உண்மையாக இருந்தது.*

*3, அவனைத் துன்புறுத்தினார் - ஆம். கடவுள் இதைச் செய்தார். அவனது நன்மைக்கென செய்தார். வசனமா 11 படித்து லூக்கா 15:14-16 ஒப்பிட்டு நோக்குக. இது தீவிரமான செயல். இருப்பினும் இது அவன் தன் நிலையை உணர்ந்து திரும்பி வரும் நோக்கத்தோடு செய்யப்பட்டது. தர்சு பட்டணத்துச் சவுலுக்குச் செய்ததைப் போன்று. அப்போஸ்தலர் 9:5 படிக்கவும். தாம் செய்வது இன்னதென்று கடவுள் அறிந்திருந்தார். இன்றும் கடவுள் மக்கள்மீது துன்பங்களையும் சோதனைகளையும் அனுப்புகிறார். ஒவ்வொரு நாளும் அவரில்லாமல் வாழ்வது பயனற்ற வாழ்வு என்பதை மக்கள் உணரவே இவ்வாறு செய்கிறார்.*

III. *கடவுள் நடப்பித்த அற்புதம்*

*என்ன அற்புதமா? ஆம். மெய்யாகவே அற்புதம்தான் - வசனங்கள் 12,13 படித்துப் பார்க்கவும். நீங்கள் எப்போதாகிலும் ஒரு அற்புதத்தைக் கண்டதுண்டா? இதோ ஒரு அற்புதம்! சற்று சிந்தித்துப் பாருங்கள். இப் பாடத்தில் சற்று முன்பு நாம் படித்த அதே மனிதன் கர்த்தரைத் தேடினான். கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினான். அவரை நோக்கிக் கெஞ்சினான். அவனில் ஒரு பெரிய மாறுதல் நேரிட்டது. பழைய நிலைக்கு உயர்த்தப்பட்டான்! இன்றும் நடப்பது இதுவே! 2கொரிந்தியர் 5:17ஐ லூக்கா 15:20-24 வரை படித்து ஒப்பிடுக.*

*மனாசேயின் வரலாறு ஜான் பன்யனின் சாட்சியை நினைவூட்டுகிறது. சத்தியம் செய்து, கடவுளை நிந்தித்து, தேவனற்ற வாழ்வு நடத்தினார் ஜான் பன்யன். 'உன் பாவங்களை விட்டு விலகி நீ பரலோகம் செல்வாயா? அல்லது பாவத்தில் வாழ்ந்து நரகம் செல்வாயா?' என்கிற ஒரு சத்தத்தைக் கேட்டார். மனாசேயைப் போல, ஜான் பன்யன் தன் பாவ வழியைவிட்டு விலகி, ஆண்டவரின் ஊழியரானார். ஆண்டவர் அவரிடம் கேட்ட கேள்வியைப் பாருங்கள். கடவுளின் இரட்சிப்பின் வழியைப் பார்த்து அது கூறுவது என்ன?*

*1. பாவியை இரட்சிக்கக் கடவுள் சர்வ வல்லமையுள்ளவர் என்று காண்கிறோம். கடவுளைவிட்டு தூரம்போய், கடவுளைப் பற்றிய எண்ணமே இல்லாதபோது, ஜான் பன்யனோடு கடவுள் பேசினார். மனாசேயின் வாழ்விலும் இப்படியே! கடவுள் முதல் அடி எடுத்து அவனது வாழ்வில் தலையிடுகிறார். 2நாளாகமம் 33:10 படிக்கவும். அவர் பரலோகி ருந்து கேட்கிறார், 'நீ எங்கே செல்வாய்?' என்று. ஆதியாகமம் 3:9, யோனா 2:9 அப்போஸ்தலர் 9:3-5ஐப் படித்து யோவான் 6:44 உடன் ஒப்பிடுக.*

*2. மனிதன் மனந்திரும்பக் கடவுள் அழைக்கிறார் என்ற காண்கிறோம். ஜான் பன்யன் தன் பாவங்களைவிட்டு விலக வேண்டும். அதுதான் மனந்திரும்புத லாகும். இது மனமாற்றம். இதுவே செயல்பட தூண்டும். ஏசாயா 55:7, அப்போஸ்தலர் 17:30,31 பார்க்கவும்.*

*3. இரட்சிப்பு என்பது முழுக்க முழுக்க கடவுளின் வேலையாக இருப்பதினால், மனிதன் தீர்மானம் செய்வதற்கென அழைக்கப்படுகிறான். மனித சித்தம் செயல் படவேண்டும். உபாகமம் 30:19, யோசுவா 24:15, யோவான் 5:40, வெளிப்படுத்தல் 22:17 பார்க்கவும்.*

*4. 'சரி' என்று கடவுளுக்கு பதில் கூறினால் பரலோகம் செல்லலாம். ஆம் பரலோகம்தான்! வெளிப்படுத்தல் 21:1-7, யோவான் 14:2, 2கொரிந்தியர் 5:8 படிக்கவும்.*

*5. வேண்டாம் என்று கடவுளுக்குப் பதில் கூறினால் நியாயத்தீர்ப்பும், நரகமும் அதற்குப் பலனாகக் கிட்டும். ஆம் நரகம்தான்! வெளிப்படுத்தல் 29:11-15,21:8 படிக்கவும*

## பாடம் 9 ஏசாயா - ஆசீர்வாதத்திற்கான படிகள்
(வேதபாடம் - ஏசாயா 6:1-9

தம்முடைய ஊழியர் ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவில் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தின் முழுமையை அனுபவித்து, அதிலே நிலைத்திருக்க வேண்டுமென நோக்கம் கொண்டு அதற்கென கடவுள் திட்டமிட்டுள்ளார். ஆனால் அநேகருடைய அனுபவமோ தோல்வியிலும், வீழ்ச்சியிலும் முடிவதாகக் கூறியுள்ளனர். ஆசீர்வாதத்தின் முழுமைக்கு, அதாவது வெற்றியுள்ள வாழ்க்கைக்கும், ஊழியத்திற்கும் முன்னேறிச் செல்வதற்கான படிகள் எவை? கீழேயுள்ள படிகளை வரிசையாகக் காண்போம்.

1. முதலாம்படி - ஆழ்ந்த தியானம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தரிசிப்பதிலிருந்துதான் முக்கியமான கிறிஸ்தவ அனுபவம் ஆரம்பமாகிறது. ஏசாயா தேவாலயத்தில் ஆராதித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென ஆண்டவரின் பிரமிப்பூட்டும் அற்புதமான பிரசன்னத்தை உணர்ந்தார். வசனங்கள் 1-5 வரை படிக்கவும்.

1. அவர் கிறிஸ்துவின் மனித அவதாரத்திற்கு முந்தின மகிமையைக் கண்டார். 'ஆண்டவர் ...வீற்றிருக்கக் கண்டேன்'(வசனம் 1). அவர் இந்த பூமிக்கு இரட்சகராக வரும் முன்பு இருந்த மகிமை அதுவாகும். யோவான் 12:41, 17:5 ஒப்பிட்டுப் பார்க்க. படைப்பின்போது, மீட்பின்போது (எபிரெயர் 1:1-3) பிதாவோடும், பரிசுத்த ஆவியானவரோடும் (கொலோசெயர் 1:16) இருந்த (இருக்கின்ற) நித்திய தேவ குமாரனைக் கண்டார்.

2. அவர் ஆண்டவர் அரசாளக் கண்டார். 'சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக் கண்டார். பூமியி ருந்த சிம்மாசனம் கா யாக இருந்தது. பரலோகத்திலே ஒரு சிம்மாசனம் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கிறது என்கிற உண்மை, நிலையற்ற காலத்தே வாழும் நமக்கு எவ்வளவு அற்புதமானது(சங்கீதம் 45:6).

3. அவர் ஆண்டவர் ஆராதிக்கப்படுவதைக் கண்டார். '.....உயரமும் உன்னதமுமான.....' (வசனம் 1,2) தூதர்கள் ஏன் நாமும்கூட ஆராதிக்க அருகதையுள்ளவர் அவர் ஒருவரே. அவரைத் தூதர்கூட்டம் துதித்துக் கொண்டிருந்தது.

4. அவர் அவரது பரிசுத்தத்தையும், தூய்மையையும் கண்டார் (வசனம் 3) ஆண்டவரின் தூய்மை கண்களைக் கூசச் செய்யும். ஆதலால் தூதர்களும் கூட தங்கள் முகங்களை மூடிக்கொண்டிருந்தனர்.

5. அவர் அவரது வல்லமையைக் காண்டார். 'சேனைகளின் கர்த்தர்' என்று (வசனங்கள் 3,5) அவர் அழைக்கப்படுகிறார்.

6. அவர் அவரது மகிமையைக் கண்டார். '...இராஜாவை என் கண்கள் கண்டதே' (வசனம் 5) என்கிறார்.

7. வரப்போகும் மகிமையின் ஒரு கீற்றைக் கண்டார். 'பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது....' (வசனம் 3) இது ஒரு நாளிலே நடக்கப்போகிறது - ஏசாயா அதிகாரம் 35 படிக்கவும்.

2. இரண்டாம்படி: பாவ உணர்வடைதல். ஆண்டவரை தரிசித்த ஏழு படிகளில் ஏசாயா பாவ உணர்வடைந்து தன்னை மிகவும் தாழ்த்தினார். 'ஐயோ! அதமானேன்.....' (வசனம் 5) என்று கதறினார். பாவ உணர்வைத் தரும் ஒரேயொரு செயல் ஆண்டவரின் தரிசனம் எனலாம் - யோபு (42:5,6), பேதுரு (லூக்கா 5:8), யோவான் (வெளிப்படுத்தல் 1:17) போன்றோரை ஒப்பிட்டுப் பாருங்கள். அவரது மேலான தூய்மையின் ஒளியில் நாம் நம்மை இழிவான பாவிகளாகக் காண்கிறோம். பாவம் நம்மைக் கடவுளிடமிருந்து பிரிக்கின்றது என்று நாம் ஏசாயாவின் வாழ்வின் மூலம் அறிகிறோம். 'அதமானேன்' என்கிற பதம் 'பிரிக்கப்பட்டேன்' என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது. ஏசாயா 59:1,2 படிக்கவும். பாவம் கடவுளிடமிருந்து நம்மைப் பிரிக்கின்றது. பாவம் கடவுளிடமிருந்து நம்மைப் பிரிக்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டு, மத்தேயு 27:46 இல் உள்ளது. பாவமே இல்லாத அவர் நமக்காக இந்தப் பிரிவை ஏற்றுக்கொண்டார் (2கொரிந்தியர் 5:21) நம்முடைய பாவத்திற்கென நாம் என்ன செய்ய வேண்டும்?

3. மூன்றாம்படி பாவ அறிக்கை செய்தல் வசனம் 5 இல் ஏசாயா '...நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்.....' என்கிறார். பாவத்தை அறிக்கை செய்வதே பாவத்தை நீக்கும்வழி. பாவத்தை மூடி மறைப்பதில் பயனில்லை. அதை விட்டு விட வேண்டும்.நீதிமொழிகள் 28:13 படிக்கவும். ஏசாயாவை வளைத் துப் போட்ட பாவம் உதடுகளின் விளைவு என்பதைக் கவனிக்கவும். அவர் பொதுவாக பாவத்தை அறிக்கையிடவில்லை. குறிப்பிட்ட பாவத்தை

அறிக்கையிட்டார். 'ஐயோ! நான் ஒரு பாவி' என்று அறிக்கையிடாமல், 'ஐயோ!.... அசுத்த உதடுகளுள்ள மனுஷன்.....' என்று கூறினார். அவர் தாம் உணர்த்தப்பட்ட குறிப்பிட்ட பாவத்தை ஆண்டவரிடம் அறிக்கையிட்டார். நாம் இதைச் செய்யும் போது நடப்பது என்ன?

4. நான்காம்படி சுத்திகரிப்பு வசனங்கள் 6,7 படிக்கவும். கூறப்பட்ட சிலவற்றைப் பார்க்கலாம்.

1. 'சேராபீன்கள்' - பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும்
2. 'நெருப்புத் தழல்' கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தைக் குறிக்கும்
3. 'பலிபீடம்' கல்வாரிச் சிலுவையைக் குறிக்கும்.

நாம் நமது பாவங்களை அறிக்கை செய்யும்போது, பரிசுத்த ஆவியானவர் கல்வாரியில் சிந்தின இரத்தத்தைப் பூசுகிறார். அதனால் நாம் நாம் கழுவப் படுகிறோம் - 1யோவான் 1:7-9. கர்த்தருக்குத் தேவை கறையற்ற ஊழியர். அவர் அசுத்தமான கருவிகளைப் பயன்படுத்துவது இல்லை - ஏசாயா 52:11 ஐ படித்து, 2கொரிந்தியர் 7:1 உடன் ஒப்பிடுக. நாம் நமது பாவங்களை ஆண்டவரிடம் அறிக்கையிடும்போது, நாம் அவரோடு நெருங்கிய ஐக்கியம் கொள்வோம். இதற்காக நாம் அவரது சத்தம் கேட்க வேண்டும்.

5. ஐந்தாம் படி - அழைப்பு வசனம் 8 படிக்கவும். '.....ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன்....' சுத்திகரிப்பிற்குப் பின்னரே ஏசாயா கர்த்தருடைய சத்தத்தைக் கேட்க முடிந்தது என்பதைக் கவனிக்கவும். நாடுகள்தோறும் தம்முடைய நாமத்தை அறிவிக்க, கடவுள் மக்களுக்குக் கட்டளை கொடுப்பதோடு, அவர்களை அதற்கென ஆயத்தப்படுத்துகிறார். 'யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற' ஆண்டவரின் சத்தத்தைப் பெரும்பாலோர் கேட்பதில்லை. ஏன்? கடவுளின் மக்களிடம் உள்ள பாவமே இதற்குக் காரணமா? அயல் நாடுகட்குச் சென்று சுவிசேஷம் அறிவித்து அருட்பணிச் செய்யவும், உள்ளூரிலேயே போதிக்கவும் வாஞ்சையுள்ள தம் வாழ்வை அர்ப்பணம் செய்த வாலிபர்கள் மிகவும் அதிகமாய்த் தேவைப்படுகின்றனர். இதைத் தொடர்வது எது?

6. ஆறாம்படி - அர்ப்பணிப்பு: வசனம் 8ஐப் படிக்கவும். ஆண்டவருக்கு ஒரு மனிதன் தேவையென ஏசாயா உணர்ந்தபோது இரண்டு காரியங்களைச் செய்தார்.

1. தம்மை ஆண்டவருக்கென ஒப்புவித்தார். 'இதோ அடியேன் இருக்கிறேன்....' என்றார்

2. தம்மை ஆண்டவரின் திருப்பணிக்கென ஒப்புவித்தார். 'இதோ அடியேன் இருக்கிறேன்....' என்று மட்டும் அவர் கூறாமல், 'என்னை அனுப்பும்...' என்றார். ஆண்டவர் தன்னை எங்கே அனுப்பச் சித்தமாயிருக்கிறாரோ, அங்கே போக ஆயத்தம் என்று குறிப்பிடுகிறார். ஆண்டவருக்கென ஊழியம் செய்யப் புறப்படும் முன்பு நம்மை முழுமையாக ஆண்டவருக்கென அர்ப்பணிக்க வேண்டும் என்பதே முக்கியம். அவருக்கு இந்த இரண்டும் தேவை. 'இதோ அடியேன் இருக்கிறேன்' என்பதும், 'என்னை அனுப்பும்' என்பதும் தேவை. அடுத்து என்ன?

7. ஏழாம் படி - கட்டளை பெறுதல்:'அப்பொழுது அவர், நீ போய், இந்த ஜனங்களை நோக்கி..... என்று சொல்' (வசனம் 9) என்றார். ஏசாயாவின் உதடுகளைக் கடவுள் ஏன் சுத்திகரித்தார் என்று நாம் இங்கு பார்க்கிறோம். அவர், போய், சொல்லவேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். பாவம் செய்யும் ஒரு மனிதரை ஆண்டவர் எடுத்துச் சுத்திகரித்து, தமது மகிமைக்கென பயன்படும் மனிதனாக மாற்றுகிறார்! ரோமர் 6:13 படிக்கவும். ஏசாயா யாரிடம் செல்ல வேண்டுமெனக் கட்டளை பெறுகிறார் பாருங்கள். தன்னைச் சுற்றியுள்ள மக்களிடம்தான்! எப்போதும் இது பொருந்தும். நீங்களும் நானும் எங்கேயிருக்கிறோமோ, அங்கேதான் நாம் ஆண்டவருக்கென சாட்சிகளாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். கடவுளின் சித்தப்படி அவர் தெரிந்து, காட்டும் இடத்திலே அவரது சித்தத்தைச் செய்வதே முழுமையான ஆசீர்வாதத்திற்குரிய வழி!

பாடம் 10 - எபெத்மெலேக் - மீட்புப் பணி
வேதபாடம் எரேமியா 38:1-13

*தீர்க்கதரிசியான எரேமியா மரண தண்டனையடைந்து (வசனம் 4) சிறையிலடைக்கப்பட்டார். அது சிறைச்சாலையல்ல. அது பாழடைந்த துரவு (கிணறு). இந்தப் பாழான, தூர்ந்துபோன இடத்திலே ஆண்டவரின் தீர்க்கதரிசி அடைபட்டுக் கிடந்தார் (வசனங்கள் 8,9) உணவும், நீரும் கொடுக்கப்படவில்லை (வசனம் 9). எரேமியாவின் பரிதாப நிலையைக் கேள்விப்பட்ட, எத்தியோப்பிய நாட்டைச் சேர்ந்த கருப்பு மனிதன் எபெத்மெலேக் என்கிற இராஜாவின் ஊழியன் எரேமியாவைக் காப்பாற்றத் தனக்கு உத்தரவு தரும்படி கேட்டான். இராஜா இதற்குச் சம்மதித்து உத்தரவு தரும்படி கேட்டான். இராஜா இதற்குச் சம்மதித்து உத்தரவு கொடுத்ததுமன்றி எரேமியாவை மீட்க இன்னும் முப்பது பேரை அவனோடு அழைத்துச் செல்ல உத்தரவிட்டார் (வசனம் 10). எபெத்மெலேக் இந்த மீட்புப் பணியில் ஈடுபட்டான். இந்தப் பெரிய மீட்புப்பணியை வசனங்கள் 11-15 வரை விளக்கமாகக் காணலாம்.*

*இந்த எளிய நிகழ்ச்சி மூலம் நாம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் காணலாம். மனுக்குலம் மரணத்தின் இருண்ட குழியிலே அமிழ்ந்து கொண்டிருப்பதை ஆதியிலே கண்டார். இராஜாவின் முன் சென்று, மீட்பின் பணியில் ஈடுபடுவதற்குத் தன்னையே அர்ப்பணித்தார். சங்கீதம் 40:7, வெளிப்படுத்தல் 13:8 படிக்கவும். அதின்படி அவர் நம்முடைய சிறையிருப்புக்குள் வந்தார். அவரது தன்னலமற்ற தியாக மரணத்தின்மூலம், வெற்றியுள்ள உயிர்த்தெழுதல் மூலம் பாவமுள்ள மனிதன் இரட்சிப்படைய முடிந்தது. 2கொரிந்தியர் 8:9, கலாத்தியர் 4:4, 1தீமோத்தேயு 1:15 பார்க்க.*

*இந்தப் பாடத்திலே, இராஜாவின் ஊழியராகிய நாமும்கூட மீட்பின் பணியில் எவ்வாறு ஈடுபட வேண்டுமென்று மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கக் காணலாம். எபெத்மெலேக் எவ்வாறு எரேமியாவை மீட்டார் என்று காண்போம். அதேபோன்று நாமும்கூட பாவத்திலும், சாத்தானின் பிடியிலும் கட்டப்பட்டுள்ள, பரிதாபமான, வழிதப்பிப்போன மக்களைத் தேடி விடுவிப்பது எப்படியெனக் காண்போம். யோவான் 8:34, 2தீமோத்தேயு 2:26 பார்க்கவும்.*

*<u>1. எபெத்மெலேக் எரேமியாவின் பரிதாப நிலையைக் குறித்துக் கேட்டு, அதின் பயங்கரத்தை உணர்ந்தான்.</u> வசனம் 7 இல், 'கேள்விப்பட்டான்' என்று காண்கிறோம். இது பார்ப்பதற்குச் சமமானது (கற்பனையில்). தீர்க்கதரிசியின் தேவையை உணர்ந்தான் - புலம்பல் 3:51 பார்க்கவும். ஆக்கினைக்குட் படுத்தப்பட்ட ஒரு மனிதன் பட்டினி கிடந்து, மூழ்கிக்கொண்டிருப்பதைக் கற்பனை செய்து பார்த்தான். அழிந்துபோகும் மக்களின் ஆத்துமாக்களை நீங்கள் இவ்வாறு பார்த்ததுண்டா? யோவான் 3:18,36, 8:21-24, எபேசியர் 2:2,3 வெளிப்படுத்தல் 20:12,15. இழந்துபோன மக்களைக் குறித்த கரிசனை உங்களிடம் உண்டா? மத்தேயு 9:36. அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்கள் இரட்சிப்படைய வேண்டுமென்று அவர்களது தேவையைக் கண்டு உணரவேண்டும். இதற்கென எபெத்மெலேக்கின் பார்வை நமக்கும் தேவை?*

*<u>2. எபெத்மெலேக் அரசனைச் சந்தித்தான்.</u> வசனங்கள் 7-9 இதைப்பற்றிக் கூறுகிறது. எவ்வளவு திறமையுடன் பேசினான் பாருங்கள்! நீங்களும் நானுங்கூட இராஜாவின் சமூகத்தில் வந்து, இவ்வாறே பேசி, நம்முடைய வேண்டுதலைத் தெரிவிக்க வேண்டும். நாம் அவர் முன்பு நிற்கும்போது, நாம் எவ்வாறு செல்ல வேண்டும், மீட்பின் பணியை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதைக் குறித்துப் பேசி வழி நடத்துவார் - எபிரெயர் 10:19,20 பார்க்கவும். பின்பு அதற்குக் கட்டளையிடுவார் (வசனம் 10) உங்களுக்கு அருமையான வர்களின் ஆத்துமாவைக் குறித்து உங்களுக்குப் பாரம் இல்லையெனில், இராஜாவின் முன்பு போய், அவர்களைக் குறித்துப் பேசுவதற்கு வகை தேடுங்கள்.*

*<u>3. எபெத்மெலெக் மற்றவர்களின் ஒத்துழைப்பைத் தேடினான்.</u> வசனம் 10,11 இல் எபெத்மெலேக் இராஜாவின் அதிகாரத்தின்படி இதைச் செய்தான் என்று காண்கிறோம். ஆத்தும ஆதாயம் எனும் பெரிய பணியில் ஈடுபடும் நமக்கு, இராஜாவின் அதிகாரத்தைப் பெற்றிருப்பினும், மற்றவர்களின் ஒத்துழைப்பும் தேவை. அதுவே ஜெபம் என்னும் ஒத்துழைப்பு - மத்தேயு 18:19 பார்க்க. மாற்கு 2:3 இல் கூறப்பட்டுள்ள நடைமுறை ஒத்துழைப்பு தேவை. நம்மைச் சுற்றியுள்ள மக்களின் இரட்சிப்பைக் குறித்து நமக்கு ஆர்வமிருந்தால் நல்ல பயன்பெற, நாம் நாடவேண்டியன பல உண்டு - யூதா 22,23 பார்க்கவும்.*

*<u>4. மீட்புக்கெனப் பயன்படுத்தின பொருட்களை எபெத்மெலேக் நம்பினான்.</u> வசனம் 11 படியுங்கள். எபெத்மெலேக் தன்னிடமிருந்த கயிறுகளை நம்பினான் எனக் காணலாம். நமக்கும்கூட முற்றும் முடிய இரட்சிக்க வல்ல நம்முடைய இரட்சகரின் வல்லமையிலும், அவரது சுவிசேஷத்தின் வல்லமையிலும் முழு நம்பிக்கை இருக்க வேண்டும். ரோமர் 1:16, எபிரெயர் 7:25 படிக்கவும். கிறிஸ்தவ ஊழியர், பிரசங்கிமார் பலர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரட்சிப்பின் வல்லமையை நம்பாதிருக்கின்றனர். எளிய சுவிசேஷ செய்தியின் பலனை நம்பவில்லை. அவர்கள் கயிற்றின் வ மையை அறியாது சந்தேகப்படுகின்றனர்.*

*<u>5. எரேமியாவிடம் தான் வைத்துள்ள அன்பை எபெத்மெலேக் வெளிப் படுத்தினான்.</u> எரேமியாவிடம் தான் வைத்துள்ள அன்பை இந்த மீட்பின் பணி மூலம் மட்டும் வெளிப்படுத்தவில்லை - வசனம் 11 படிக்கவும். எரேமியா காயமின்றி கரையேற அவன் பயன்படுத்தின கிழிந்துபோன பழம்புடவைகள், கந்தைத் துணிகள் மூலமும் வெளிப்படுத்தினான். என்னே அன்பு! எரேமியா இந்தக் கந்தைத் துணிகள் இல்லாமலே மீட்கப்பட்டிருக்க முடியும். இருப்பினும் இன்னும் அதிக வ யோ காயமோ இன்றி மீட்கப்பட்டார். நம்மைச் சுற்றியுள்ள மக்கள் நாம் அவர்களிடம் அன்பு செலுத்துகிறோம் என்று உணர்ந்தால், அந்த ஆத்துமாக்களை எளிதில் ஆதாயப்படுத்த இயலும். மாற்கு 10:21 பாருங்கள்!*

*<u>6. எரேமியாவை மீட்பதற்குரிய ஆலோசனையை எவ்வாறு எடுத்துரைப்பது என எபெத்மெலேக் அறிந்திருந்தான்.</u> வசனம் 12ஐப் படித்துக் கற்பனை செய்து பாருங்கள்! ஒரு ஆத்துமாவைக் கிறிஸ்துவிடம் எவ்வாறு வழிநடத்துவது என்பதை நீங்கள் அறிவீர்களா? இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டுமென்று ஒரு பாவியிடம் நீங்கள் கூற இயலுமா? இந்தப் பெரிய வேலைக்கென நாம் ஆயத்தம் செய்ய வேண்டும். உங்கள் வேதாகமத்தை எடுத்து, இரட்சிப்பைப்பற்றிக் கூறும் வசனங்களைப் படித்து, உரையாடலில் பயன்படுத்தப் பழகவும். அவ்வசனங்களை மனனம் செய்து, வசனங்களைக் கோடிட்டு, வரும் இடங்கள், பக்கங்கள் யாவற்றையும் உங்கள் வேதாகமத்தின் உள் அட்டையில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.*

*<u>7. எபெத்மெலேக், எரேமியா மீட்கப்படும் வரையில் ஓய்ந்திருக்கவில்லை.</u> எரேமியா தீர்க்கதரிசியை மீட்கும் இந்த வேலை, அதிக நேரம் எடுக்கவில்லை (வசனம் 13). ஆனால் சில நேரங்களில் இரட்சிப்படைய வேண்டும் என்று நாம் வாஞ்சிக்கும் நபர் ஆண்டவரிடம் வருவதற்கு நீண்ட காலம் ஆகும், நமக்குப் பொறுமையும், ஞானமும் தேவைப்படும் - கலாத்தியர் 6:9 படிக்கவும்.*

*எரேமியா மீட்கப்பட்டவுடன் எபெத்மெலேக் இக்காட்சியிலிருந்து மறைந்து போகிறான். ஆத்தும் ஆதாயம் செய்யும் மனிதனும் இப்படியே இருக்க வேண்டும். - அப்போஸ்தலர் 8:39 ஐப் படித்து யோவான் 3:30 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.*